உ

பூநகரி - ஆலங்கேணி - கட்டுக்கரை

# அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்



# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

28.06.2016

உ



## விநாயகர் வணக்கம்

திகட சக்கர செம்முகமைந் துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அதட சக்கர வின்மணி யாவுறை
விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்.

பூநகரி - ஆலங்கேணி - கட்டுக்கரை

# அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்



# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

28.06.2016



**நூலின் பெயர்** - மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

**பக்கங்கள்** - 62

**வெளியீடு** - நிர்வாக பரிபாலன சபையினர்

**பிரதிகள்** - 200

**அச்சுப்பதிப்பு** - கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

# பூநகரி ஆலங்கேணி கட்டுக்கரை
# அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
## புனராவர்த்தன கிரணோத்தாரண அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ
# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2016



| கிரியாரம்பம் | எண்ணெய்க்காப்பு | மஹா கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 13.06.2016 திங்கட்கிழமை | 16.06.2016 வியாழக்கிழமை | 17.06.2016 வெள்ளிக்கிழமை |

விநாயகப்பெருமான் மெய்யடியார்களே,

இந்து சமுத்திரத்தின் முத்தாக மிளிர்வதும் தட்சிணகைலாயம் என போற்றப்படுவதுமான இல் இலங்காபுரியின் வடபால் சைவமும் தமிழும் தழைத்தோங்கி நிற்கும் பூநகரி மண்ணின் ஆலங்கேணி பதியிலே வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டுவன பாலிக்கும் விநாயகப் பெருமானின் ஆலயம் புதிதாக புனருத்தாரணம் செய்யப்பட்டு நிகழும் துர்முகி வருடம் ஆனித் திங்கள் 03ம் நாள் (17.06.2016) வெள்ளிக்கிழமை விசாக நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 06.40 மணி முதல் 07.52 மணிவரையுள்ள மிதுனலக்ன சுப வேளையில் மகாகும்பாபிஷேகம் நிகழ எம்பெருமானின் திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் அனைவரும் மகா கும்பாபிஷேகத்திலும் கிரியாகாலங்களிலும் கலந்து கொண்டு திருவருள் பெற்று பெருவாழ்வு வாழ்வோமாக!

## கும்பாபிஷேக கிரியா நிகழ்வுகள்

துர்முகி வருடம் வைகாசித்திங்கள் 31ம், 32ம் நாள் (14.06.2016) செவ்வாய்க்கிழமை (திங்கட்கிழமை அதிகாலை)

அதிகாலை 5.00 மணி - விநாயக வழிபாடு, எஜமான சங்கற்பம், புண்ணியாக வாசனம், தேவப்ராம்மணானுக்ஞை

காலை 9.00 மணி - புண்ணியாக வாசனம், திரவிய விபாஹம், திரவிய சுத்தி, மகாகணபதி ஹோமம், பேரீதாடனம், நவக்கிரமகம், கோறு பதிக பாராயணம், மகாலட்சுமிஹோமம், கோபூஜை, கோதானம்

மாலை - 5.00 மணி - புண்ணியாக வாசனம், கிராம சாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்னஹோமம் சாந்திஹோமம், திசாஹோமம், வாஸ்துசாந்தி, ஆசய சுத்தி

காலை 09.00 மணி - புண்ணியாக வாசனம், [illegible]

மாலை 05.00 மணி - புண்ணியாக வாசனம், மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், சிவாச்சார்ய ரக்ஷாபந்தனம், கும்பஅலங்காரம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், யாகஹோமம், நூபீந்தாபனம், தீபாஸ்தாபனம், யாகபூஜை ஹோமாதிகள், பேரீதனம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம்.

துர்முகி வருடம் ஆனித்திங்கள் 02ம் நாள் (16.06.2016) வியாழக்கிழமை

காலை 9.00 மணி - புண்ணியாவாசனம் விசேஷ சந்தி, தைலாப்யங்கம், யாகபூஜை, பாலஸ்நாபனம், விசேஷ திரவிய ஹோமம்.

மாலை 6.00 மணி - புண்ணியாகவாசனம், பூதசுத்தி, பிம்பசுத்தி, மூர்த்திரட்சாபந்தனம், சகஸ்ரகலச உத்ஸவநியாசம், யாகபூஜை, பச்சியஸ்நானம், கீதநாத சமர்ப்பணம்.

துர்முகி வருடம் ஆனித்திங்கள் 03ம் நாள் (17.06.2016) வெள்ளிக்கிழமை

காலை 5.30 மணி - புண்ணியாகவாசனம், விசேஷ சந்தி, யாகபூஜை, ஹோமாதிகள், உபசாரஹோமம், மகாபூர்ணாகுதி, அந்தர்பலி, பகிர்பலி, காலை 06.40 மணி முதல் 07.52 மணிவரையுள்ள மிதுனலக்ன சுப வேளையில் ஸ்தூபலிங்கசிகரம் அபிஷேகம், மகாகும்பாபிஷேகம், தசதர்சனம், எஜமானபிஷேகம், ஆசீர்வாதம், மகாபிஷேகம்.

**எண்ணெய்காப்பு 16.06.2016. வியாழக்கிழமை காலை 7.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை இடம்பெறும்.**

## கும்பாபிஷேக குருமார் விபரம்

**சர்வபோதகம்**

[illegible] சிவஸ்ரீ. தாணுமகாதேவக் குருக்கள் ([illegible])

[illegible] சிவஸ்ரீ. விஸ்வ நாராயணக் குருக்கள் (கொழும்பு)

[illegible] சிவஸ்ரீ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் ([illegible])

**பிரதிஷ்டா பிரதம குரு**

"கிரியாசக்ரவர்த்தி, பிரதிஷ்டாமணி"

சிவஸ்ரீ. இலக்ஷ்மிகாந்த ஜெகதீசக் குருக்கள் J.P, M.A, BCA(Hons), DIT

([illegible])

**சாதகாசாரியார்கள்**

சிவஸ்ரீ. இலக்ஷ்மிகாந்த சத்யோஜாத குருக்கள் - [illegible]

சிவஸ்ரீ. பிரணதார்த்திஹர கிருபாகரக்குருக்கள் - [illegible]

சிவஸ்ரீ. ரஞ்சித கீர்த்திவாசக் குருக்கள் - [illegible]

**கும்பாபிஷேக மூர்த்திபர்கள்**

சிவஸ்ரீ. ந. ஹரேந்திரக் குருக்கள் - கொழும்பு

சிவஸ்ரீ. சி. சிவேந்திரக் குருக்கள் - கொழும்பு

சிவஸ்ரீ. ப. தினேஸ்வரக் குருக்கள் - [illegible]

சிவஸ்ரீ. கு. பிரபாகரக் குருக்கள் - [illegible]

**யாகசம்ரட்சகர்கள்**

பிரம்மஸ்ரீ. தி. திருஞானசங்கர சர்மா - [illegible]

பிரம்மஸ்ரீ. சுந்தர யதுகுல சர்மா - கொழும்பு

சிவஸ்ரீ. செ. தியாகராஜ குரு - [illegible]

**ஸ்வயம்பஹி - பிரம்மஸ்ரீ. திருஞானசம்பந்த சர்மா,** நாவற்குழி

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று மண்டல பூர்த்தி நாளில் (28.06.2016) செவ்வாய்க் கிழமை 1008 சங்காபிஷேகத்துடன் நிறைவு பெறும்

| மங்கள வாத்தியம் | ஆலய புனர்நிர்மாணம் | ஆலய வர்ணம் |
|---|---|---|
| S.M. இராசதுரை குழுவினர், கல்வயல், சாவகச்சேரி | க. நிரஞ்சன் குழுவினர், கல்வயல், சாவகச்சேரி | இ. ஜெயசீலன், [illegible], கிளிநொச்சி |

**நேர்முகவர்ணனையாளர்**

சைவசிகாச்சாரியார் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி [illegible]

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஆலய பரிபாலன சபை

Printed By : Vihadan Printer, 0112504370

## கும்பாபிஷேக நிகழ்வினை நடாத்திய சிவாச்சாரியார்களும் பரிபாலன சபையினரும்



கும்பாபிஷேகம் நிகழ்த்தியசிவாச்சாரியார்கள்

*பிரதிஷ்டா பிரதம குரு*

க்ரியாக்ரமஜோதி, பிரதிஸ்டாவித்தகர்

**சிவஸ்ரீ.இலட்க்ஷிமிகாந்த ஜெகதீசக் குருக்கள்**

பிரதமகுரு கந்தசுவாமி கோயில், பாணந்துறை.

*சர்வபோதகம்*

வேதாகம ஞானபாஸ்கரன்

**சிவஸ்ரீ தாணுமகாதேவக்குருக்கள்**

(தர்மதாஸ்தா குருகுலம்,இணுவில்)

சிவாகம ஞானபானு

**சிவஸ்ரீ.இ. பிரணதார்த்திஹரக்குருக்கள்**

(வீரபத்திரக்கோவில், கோப்பாய்)

வேதாகம வித்யா பூசணம்

**சிவஸ்ரீ.விஸ்வநாராயணகுருக்கள்**

(கொழும்பு)

*சாதகாச்சாரியார்கள்*

**சிவஸ்ரீ.இலக்ஷ்மிகாந்தசத்யோஜாதகுருக்கள்**

திருநெல்வேலி

**சிவஸ்ரீ. பிரணதார்த்திஹாகிருபாகரக்குருக்கள்**

கோப்பாய்

**சிவஸ்ரீ. ரஞ்சிதகீர்த்திவாசக் குருக்கள்**

ஒட்டுசுட்டான்

*கும்பாபிஷேக மூர்த்திபர்கள்*

**சிவஸ்ரீ.நா.ஹரேந்திரக் குருக்கள்**

கொழும்பு

**சிவஸ்ரீ.சி.சிவேந்திரக் குருக்கள்**

கொழும்பு

**சிவஸ்ரீ. ப.தினேஸ்வரக்குருக்கள்**

மல்லாவி

**சிவஸ்ரீ.கு.பிரபாகரக்குருக்கள்**

மல்லாவி

*யாகசம்ரட்சகர்கள்*

**ப்ரம்மஸ்ரீ.தி.திருஞானசங்கரசர்மா**

புத்தளம்

**ப்ரம்மஸ்ரீ.சுந்தரயதுகுலசர்மா**

கொழும்பு

**சிவஸ்ரீ.செ.தியாகராஜ குரு**

நாவலப்பிட்டி

*ஸ்வயம்பஹி*

**ப்ரம்மஸ்ரீ.தி.திருஞானசம்பந்தசர்மா**

நாவற்குழி

---

*நேர்முகவர்ணனையாளர்*

சைவசிவாச்சாரியார்

**சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம்**

சங்கத்தானை, சாவகச்சேரி.

*மங்களவாத்தியம்*

சைவசிவாச்சாரியார்

**S.M. இராசதுரைகுழுவினர்**

கணேசபுரம், கிளிநொச்சி.

*ஆலயநிர்மாணம்*

**திரு.பாலசுப்பிரமணியம் நிரஞ்சன்**

கல்வயல், சாவகச்சேரி

*வர்ணவேலை*

**வர்ணவேலை்**

அக்கராயன்குளம், கிளிநொச்சி.

# பிரதம குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி



அகில உலக நாயகனாகவும், இந்து மக்களுடைய முதல் வழிபாட்டிற்குரிய தெய்வமாகவும் விளங்குகின்ற விநாயகப் பெருமானுக்கு சீரும் சிறப்பும் மிக்க பூநகரி ஆலங்கேணி, கட்டுக்கரைப் பகுதியிலே மூலவருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் தனித்தனியாகக் கருவறை முதல் எல்லா மண்டபங்களும் விதிமுறைகளோடு எதுவித தவறுகளும் நிகழ்ந்து விடாது மிகவும் அழகான முறையிலே அமைக்கப்பட்டு இத் தினத்திலே கும்பாபிஷேகம் நடைபெறுவதென்பது இந்த ஊர் மக்கள் செய்கின்ற புண்ணிய கைங்காரியங்கள் ஆகும்.

இப் பெருமைமிகு பணிக்காக உழைத்த அனைத்து அடியவர்களுக்கும் இந்த கும்பாவிஷேக சிறப்பு நிகழ்வுகளை வெளியிட இருக்கும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**'க்ரியாக்ரமஜோதி, பிரதிஷ்டாவித்தகர்'**
**சிவஸ்ரீ இலட்ஷ்மிகாந்த ஜெகதீசக்குருக்கள்**
J.P, M.A, B.C.A (Hons), DIT
பிரதமகுரு, கந்தசாமி கோயில்
பாணாந்துறை.

# ஆசியுரை

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்



ஆலய வழிபாடு என்பது மனிதப் பிறவியின் பயனை உணரச் செய்யும் நியதிகளடங்கிய மெய்ச் செயலாகும். ஆலயங்கள் அமைப்பது ஆகம விதிகளுக்கு அமைவாக நடைபெறும் சிவப் பணியாகும். திருப்பணி, சிவப்பணி, இறைபணி, நற்பணி, அறப்பணி எனப் பல பணிகள் மனிதநேயம் உள்ளவர்களின் உள்ளக் கிடக்கையாக அமையும். அதற்கு அமைய ஆன்மீக நெறியின் பால் ஈடுபாடு கொண்ட அன்பு நெஞ்சங்கள் தம் அயரா முயற்சியில் பூநகரி, நல்லூர், ஆலங்கேணி, கட்டுக்கரை வீரகத்திப் பிள்ளையார் ஆலயம் அமைத்து திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழா நிறைவாகும் நாளில் வெளியீடு செய்யும் அருள் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.



"திரைகடலோடியும் திரவியம் தேடு" பொருள் தேட வேண்டியது எமது பௌதிக வளங்களை மேலும் வளம்படுத்திக் கொள்வதற்காகவேயாகும். அதிலும் தேடிய செல்வத்தை மற்றவர்கட்கு பகிர்ந்து கொடுத்து தம்மையும் அதில் பங்கெடுக்கச் செய்யும். ஒரே பணி சிவப்பணியாகும். சிவப் பணியின் மகத்துவம் மற்றவர்கள் வாழ வழிகாட்டியாக இருப்பதற்கு மனிதனை உயர்த்தி நிற்கும் பெரும் பேறாகும் பேற்றைக் கொடுக்கும் சக்தி உடையது. இதற்கு ஈடு இணையாக இவ்வுலகத்தில் வேறு ஏதும் இல்லை. புலம் பெயர்ந்தாலும் சைவத் தமிழ் மக்களின் மனம் மொழி, மெய்களினால் ஒன்றிணைந்து திரட்டிய சொத்தும், ஊரவர்களின் உழைப்பும் இப்பெரும் பணியாக அமைந்தது.

புலன் வழி மனதைச் செல்லவிடாது மனம் ஒருநிலைப்பட்டு செய்யப்பட்ட பணி இவ் இறை பணியாகும். சைவ சித்தாந்த தத்துவத்தின்படி ஆன்மாக்களின் இறுதி இலட்சியம் வீடுபேறு அடைதலேயாகும். மீண்டும் பிறவாநிலை அடையச் செய்தலேயாகும். ஆகமங்கள்

1) கோயிற் கிரியைகள் அவற்றைச் செய்யும் முறைகள்
2) வழிபடுவோருக்குரிய இயல்புகள்
3) சைவ சாதன வழிபாட்டினால் ஆன்மாக்கள் அடையும் பேறுகள்
4) ஆலய அமைவிடம் அதன் அமைப்பு முறை
5) படிம இலக்கணம் படிமங்கள் வார்க்கும் முறை

6) வாகனங்கள், தேர் அமைக்கும் முறைகள்

7) அர்ச்சகர், சிற்பாசாரியர் ஒழுக்கம் எனப் பல தரப்பட்ட சைவசமய உண்மைகளை வெளிக்கொண்டு வரும் இறை நூலாகும்.

கடவுள், உயிர், உலகு ஆகிய முப்பொருள் இயல்பினையும், உயிர்கள் இறைவனை உணர்வதற்கு உதவும் சாதனங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் சைவ நாற்பாதமே. இவற்றைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன சிவாகமங்கள் 28, உபாகமங்கள் 207 இவை இன்றிச் சைவத் தமிழ் மக்களின் வாழ்க்கை இல்லை என்றுணர்ந்தவர்களின் அரிய செயலே இன்று ஆலங்கேணி கட்டுக்கரை வீரகத்திப் பிள்ளையார் ஆலயமாகும். சிறந்த தோற்றப் பொலிவுடன் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவுமாகவும் அமைகின்றது.

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடி நூறாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணி நின்றப் பொருள் ஏத்துவன் நானே.

(திருமந்திரம்)

ஆலங்கேணி, கட்டுக்கரை வீரகத்திப் பிள்ளையார் ஆலய அமைப்பு முதல் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா வரையும் அர்ப்பணிப்புடன் சிவப்பணி புரிந்த சைவத் தமிழ் நெஞ்சங்கள் கிரியைத் தொண்டாற்றிய சைவ சிவாச்சாரியார்கள் ஆலங்கேணி, கட்டுக்கரை வீரகத்திப் பிள்ளையார் அருள் பெறும் அடியார்கள் அனைவருக்கும் பிள்ளையாரின் திருவருள் கிடைக்கப். பிரார்த்தித்து ஆசி கூறவதும் வீரகத்திப் பிள்ளையார் திரு அருளேயாகும்.

**'ஓதலுடமை வேத வித்தை'**

**'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'**

**சைவ சிவாச்சாரியார், ஈழவூர் சைவப்புலவர்,**
**சைவசித்தாந்தப் பண்டிதர், இந்து தர்ம ஆசிரியர்**
**சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா MA-JP**
திருச்சபை நாயகர் அமைப்பாளர்,
உலக சைவத் திருச்சபை,
இலங்கை.

# ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி



'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று முத்தமிழ் வித்தகி ஔவைப் பிராட்டியார் கூறி இருக்கின்றார். ஏன் அவர் அப்படிக் கூறினார் என்றால் அந்த இடத்திலே இருக்கின்ற கோயில்கள் சிறப்படைகின்ற போதுதான் அந்த ஊரே சிறப்படைகின்றது. ஊர் சிறப்படைகின்றபோதுதான் ஊர் மக்களின் வாழ்வு சிறப்படைகின்றது. தெய்வீகம் நிலவாத வீடுகள் காரிருள் சூழ்ந்த கல்லறைகள்தான் . அந்தக் கல்லறை வாழ்க்கையிலே சந்தோசம் கிடைப்பதில்லை நின்மதி கிடைப்பதில்லை.

சந்தோசமான வாழ்விற்கு, நின்மதியான வாழ்விற்கு தெய்வத்தின் அனுசரணை வேண்டும் அதற்காகத்தான் குடியிருக்கும் இடத்திலே கோயில் வேண்டும் என்றது இந்து மதம். அதற்காகத் தான் நாங்கள் வாழ்கின்ற இந்த சூழலின் மத்தியிலே கோயிலைக் கட்ட வேண்டும் என்பது விதியானது.

அந்த நோக்கத்தோடு அமைக்கப்பட்டதே இந்த ஆலயம். இதில் எழுந்தருளி இருக்கின்ற கட்டுக்கரைப் பிள்ளையாரின் அருள்பெற்று அனைவரும் சீரும் சிறப்புடனும் வாழப் பிரார்த்திக்கின்றேன்.

**சு. சேதுராசா**

தலைவர்,

பரிபாலனசபை.

# ஆலய பரிபாலனசபைச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி



கிளிநொச்சி மாவட்டம் நெல்மணிக்கு புகழ் பூத்த பூநகரி மண்ணிலே தொல் குடியாக விளங்கும் ஆலங்கேணி பதியிலே வீற்றிருந்து அருட்கடாட்சத்தினை அள்ளி வழங்கும் கட்டுக்கரை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக விழாவிற்கும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் நல் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றேன்.

ஏறக்குறைய நூறு ஆண்டுகால பழமை வாய்ந்த இவ்வாலயமானது சைவசமய பண்பாட்டு விழுமியங்களால் இப்பகுதி மக்களை வழிப்படுத்தி வருகின்ற பெருமைக்குரியது.

அருள் மிகு விநாயகப் பெருமானது கும்பாபிஷேகத்தினைச் சிறப்புற நடாத்திய சிவஸ்ரீ லக்ஷ்மிகாந்த ஜெகதீஸ்வரக் குருக்கள்,ஆலயத்தைக் கட்டிய ஸ்தபதிமாரான திரு பா.நிறஞ்சன் குழுவினர்,வர்ணவேலையினை செய்து தந்த திரு.ஜெயசீலன் குழுவினர்,ஆலயத்தினை புனர் நிர்மானம் செய்யவேண்டுமென அரும்பாடுபட்ட சக அறங்காவலர் சபையினர்க்கும், ஒலி, ஒளி அமைப்பினை,ஒழுங்குபடுத்திய திரு.க.நிமலன்,ஆலய மின் இணைப்பு வேலையினை செய்து தந்த திரு உள்ளூர் வெளியூர்களில் இருந்து நிதி உதவி,பொருள் உதவி, சாரீர உதவி புரிந்தோர், மங்களவாத்தியம் இசைத்த இராசதுரை குழுவினர், மற்றும் இந் நூலை வெளியிடுவதில் முழுமையான பங்களிப்பினை வழங்கிய அதிபர் திரு.ஆனந்தராசா, பூமாலை அலங்காரம் செய்தோர், குறிப்பாக இவ்வாலயத்தை புனரமைப்பதில் அதி கூடிய பங்களிப்பினை நல்கிய பொருளாளர் திரு.ஐ.லோகநாதன் மற்றும் இக் கும்பாபிஷேகம் செம்மையாக நடை பெற ஒத்தாசை நல்கிய அனைவருக்கும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருட் கடாட்சத்தினை வழங்குவார் என வாழ்த்தி நன்றி கூறி எம்பெருமானது பாதார விந்தங்களை வணங்கி நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமுவகை அடைகின்றேன்.

"ஆவணப் பேழையாகத் திகழட்டும் கும்பாபிஷேக சிறப்புமலர்"

**செயலாளர் கி.சாந்தரூபன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், கரைச்சி,
கிளிநொச்சி.

# ஆலய பரிபாலனசபைப் பொருளாளரின் வாழ்த்துச்செய்தி



புகழ் பூத்து குலுங்குகின்ற பூநகரி பகுதியிலே ஆலங்கேணி, கட்டுக்கரை பதியுறை ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மேற்கொள்ளப்படுகின்ற பஞ்சகுண்டலத்துடன் கூடிய மஹா கும்பாபிஷேகம் காணப்பெறுவது சிவனடியார்களாகிய இந்த ஊர்மக்கள் செய்கின்ற புண்ணிய கைங்கரியங்களாகும்.

ஆன்ம ஈடேற்றத்தைத் தருவதற்காக எங்கும் எதிலும் நிறைந்திருக்கின்ற பரம்பொருள் அக்கினி, காற்று, நீர் என்பவற்றின் ஊடாக உலக சஞ்சாரத்தை தன்வசப்படுத்துகின்ற மகா யாகத்தில் அக்கினியை உருவாக்கி வேத மந்திரங்களோடு கூடிய நீரினாலே உருவாக்கப்பட்ட கும்பத்தில் திருவுருவை உருவேற்றி அந்தக் கும்பத்தினை எம்பெருமானுடைய உருவத்திருமேனிக்கு அபிஷேகம் செய்வதனாலேயே அனைவருக்கும் திருப்பேறு கிடைக்கின்றது.



ஆகவே பழமை வாய்ந்த இந்த ஆலயமானது அடியார்கள் மற்றும் திருப்பணி சபையினரின் அரவணைப்பு ஆதரவினாலே புதுப்பொலிவுபெற்று மஹா கும்பாவிஷேகம் காணப் பெறுகின்றது.

பூநகரி மண்ணிலே குறிப்பாக ஆலங்கேணி, நல்லூர் பகுதியிலே இன்றைய நாள் மிகவும் சிறப்பான நாளாகக் கருதப்படுகின்ற நாள் இன்றைய நாளிலே மிகவும் அழகான முறையிலே பிரமாண்டமாக இந்த ஆலயத்தினை புதிய தோற்றத்திலே கட்டி காணக்கிடைக்காத நற்பெரும் காரியம் எங்கள் கண்களுக்கு கிடைத்திருக்கின்றவாறு அந்தணர்கள் புடைசூழ பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ இலட்சுமிகாந்த ஜெகதீஸ்ச குருக்களினாலே உள்ளம் மெய் சிலிர்க்க நடைபெறுவதாவதானது இந்த ஊர்மக்கள் மட்டும் அல்ல உலகெங்கும் பரந்து வாழும் இந்துமக்களுடைய வாழ்விலே தெய்வீக ஒளிபரவ எல்லாம் வல்ல கட்டுக்கரைப் பிள்ளையாரை வேண்டிக் கொள்கின்றேன்.

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளும் ஓங்காரத்தின் உட்பொருளுமானவர் விநாயகப் பெருமான் அடியார்களின் விக்கினங்களையெல்லாம் விலக்கி திருவருள் சுரக்கின்ற தெய்வம் ஸ்ரீ விநாயகப் பெருமானே ஆவர்.

அவருடைய தோற்றமே தெய்வீகமானது புனிதப்பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கும் ஒவ்வொருவரும் இந்த விநாயகப்பெருமானுடைய திருவருளைப் பெற்றுய்வதற்கு வழிகாட்டுகின்ற ஒரு புண்ணியகாரியமே இந்தக் கும்பாபிஷேகப் பெருவிழா.

வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த தனிப்பெரும் தெய்வமான விநாயகப் பெருமானுடைய திவ்விய கருணையை உணரமுடியும்.

தனக்குமேலே வேறொரு தலைவர் இல்லாதவராக இருப்பதனாலே இவருக்கு விநாயகர் என்று பெயர் வி - என்றால் மேலான நாயகர் என்று சொன்னால் தலைவர் விக்கினங்களையெல்லாம் களைபவரான படியால் விக்னேஸ்வரர் எனப்பட்டார். மேலும் கணங்களுக்கெல்லாம் ஈசனாகையால் கணேசன் என்றும் அதேபோல் கணங்கள் யாவற்றுக்கும் பதியாக விளங்குகின்றமையால் கணபதி என்றும் யானை முகத்தை உடையவராதலால் யானை முகன் என்றும், ஐந்து கரங்களைக் கொண்டிருப்பதனாலே ஐங்கரன் என்றும் கரி முகன் கஜமுகன் இப்படியெல்லாம் அழைக்கப்படுகின்ற இவர் எங்களுடைய முதல் வணக்கத்துக்குரியவர்.

**"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்**
**அதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர் தம்கை"**

என்ற பாடலின் மூலம் கணபதியின் பெருமை விதந்துரைக்கப்படுகின்றது. திருவாக்கும் பீடும் பெருக்கும் அவருடைய பெருமைகளை எங்களுடைய எண்ணங்களிலே மனனம் செய்து சைவ சமயத்தவர்களான நாம் ஒவ்வொருவரும் புனிதப்பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்ததன் பயனைப் பெறுவோமாக.

**ஐயம்பிள்ளை லோகநாதன்**
பொருளாளர்
ஆலய பரிபாலன சபை

# வாழ்த்துச்செய்தி



விக்கினங்களைத் தீர்த்து வைக்கும் விநாயகப் பெருமானாக வரலாற்று தடயங்கள் நிறைந்த களனிகளும் நீர்நிலைகளும் நட்டாயிரம் பட்டாயிரம் என பட்டினப்பாலை எனும் நூலில் சிறப்பிக்கப்படும் பனை மரங்களும் சூழ்ந்த பூநகரி, ஆலங்கேணி எனும் புண்ணிய பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கட்டுக்கரை வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தான பரிபாலன சபையால் சங்காபிஷேக நன்நாளில் வெளியிடப்படும் கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.



ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்ற மக்கள் வாழ்வியலையும் அதனோடிணைந்த பண்பாட்டு விழுமியங்களையும் பேணிக்காப்பதிலும் ஆயகலைகளை பேணுவதிலும் வளர்த்தெடுப்பதிலும் ஆலயங்களின் வகிபங்கு அளப்பெரிது. பாரம்பரிய வாழ்க்கை முறையையும், மரபுத் தொடர்ச்சியையும் நவீன சமுதாயத்திலும் கைநழுவிப் போகாதவாறு புதிய பதிவுகளைச் செய்வது மிக அவசியமான பணியாகும்.

இந்த வகையில் ஆலய பரிபாலன சபையினர் ஆலயத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்கும் கையளிக்கும் பெருமுயற்சி பாராட்டத்தக்கது.

பொலிவிழந்து இருந்த ஆலயத்தை உள்ளூரில் வசிக்கும் அடியவர்களின் நிதியுதவி, சரீர உதவி மற்றும் மனஉதவியுடனும் மற்றும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழுகின்றபோதும் பிறந்தமண்ணையும் சொந்த ஊரையும் தாம் வழிபட்ட தலத்தையும் மறந்து விடாத நிலையில் விநாயகனின் அடியவர்கள் வழங்கிய பேராதரவுடனும் பிரமாண்டமான அழகான ஆலயமாக எல்லாம் வல்ல எம்பெருமானின் இறையாசியுடன் பரிபாலன சபையினர் அமைத்து எம்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் 17.06.2016 அன்று குடமுழுக்கு விஞ்ஞாபனத்தை நிறைவேற்றியிருக்கின்றனர். பூசலார் நாயனார் மனதிலே கோயில் அமைத்து கும்பாபிஷே

கத்திற்கு முகூர்த்த நாள்குறித்தார். ஆனால் பரிபாலன சபையினர் நிஜமாகக் கோவில் அமைத்து எண்ணுதற்கரிய கைங்கரியத்தை நிறைவேற்றியுள்ளனர். அவர்களின் முயற்சியை பாராட்டுகின்றேன்.

தொடர்ந்து இவ் ஆலயத்தை சிறப்பாக பரிபாலித்து, பண்பாட்டு விழுமியங்களையும் வழிபாட்டு மரபுகளையும் பேணிக்காத்து சைவமும் தமிழும் எம் ஊரில் ஓங்க விநாயகப் பெருமான் அருளல்பாலிக்க வேண்டுமென வேண்டி விடைபெறுகின்றேன்.

**கு. குகேந்திரன்**
செயலாளர், ஆலய பரிபாலன சபை
மேளாய் ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயம்.
அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பூநகரி.

# சிறப்பு மலரினைத் தொகுப்புச் செய்தவரின் உள்ளத்திலிருந்து.



ஆலங்கேணி, கட்டுக்கரை வீரகத்திப் பெருமானின் கும்பாபிஷேக சிறப்பு மலரினைத் தொகுப்புச் செய்த பாக்கியம் எனக்கு கிடைத்ததனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். சிறப்பு மலருக்கான தகவல்கள், தரவுகள், ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் தந்துதவிய அனைவரிற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எமது கிராமத்தில் அமையப்பெற்ற தொன்மை மிக்க இவ்வாலயம் புதிதாக மீளமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்தமை எமது கிராமத்திற்கும் இந்து மதத்திற்கும் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும். நாம் ஒவ்வொருவரும் விநாயகப் பெருமானை எமது சுக நலன்களுக்காக வழிபட்டாலும் நாம் அனைவரும் சேர்ந்து இந்து மதம் வளரப் பணி செய்துள்ளோம். இவ்வாலயம் எமது கிராமத்திலிருந்தும் ஏனைய இடங்களிலிருந்தும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் பக்த அடியார்களின் நிதியுதவி உள்நாட்டில் வசிக்கும் பக்த அடியார்களின் நிதியுதவி மற்றும் சரீர உதவி என்பவற்றின் மூலம் முழுமையாக புதிதாக மீளமைக்கப்பட்டுள்ளது. இச் செயற்பாட்டின் மூலம் எமது சமயம், ஆன்மீகம், கலை கலாசாரம் வளர நாம் அனைவரும் செயற்பட்டுள்ளமை ஒரு முக்கிய விடயமாகும்.

ஆலயத்தின் மீள் கட்டுமாணப்பணியிலும் ஆலயத்தின் பூசைகள், விழாக்கள் என்பவற்றை முறையாக நடாத்துகின்ற வகையிலும் தற்போது பரிபாலன சபையின் தலைவர் திரு. சு.சேதுராசா, செயலாளர் திரு.கி.சாந்தரூபன், பொருளாளர் திரு.ஐ.லோகநாதன் மற்றும் பரிபாலனசபை உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுவதில் மனமகிழ்வடைகின்றேன். குறிப்பாக பரிபாலனசபைப் பொருளாளர் திரு. ஐ.லோகநாதன் அவர்கள் நீண்ட காலமாகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி ஆகம விதிப்படி இவ்வாலயம் உருவாக அரும்பணி செய்துள்ளார். ஊர் மக்களும் சேர்ந்து கும்பாபிஷேக நிகழ்வு சிறப்பாக அமையப் பணி செய்துள்ளனர். அனைவருக்கும் விநாயகப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டுகின்றேன்.

**திரு.ப.ஆனந்தராசா**
உள்ளகக் கணக்குப் பரிசோதகர்,
ஆலய பரிபாலனசபை

# ஆலயத்தின் பழையதோற்றம்





02.05.2012 அன்று ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டபோது





# ஆலய சிரமதானப் பணிகளின் போது





# ஆலயம் மீள் நிர்மாணம் செய்து கொண்டிருந்த போது














# ஆலயத்தில் நடைபெற்ற நெல் அறுவடை விழாவின் போது





# கும்பாபிஷேக நிகழ்வின் பதிவுகள்













































































# ஆலய ஊஞ்சல் பாட்டு





**காப்பு**

சீருலகு சிறந்திடு நல் பூநகர்தன்னில்

சிறப்புறவே வந்துறைந்து அருள்பாலிக்கும்

பேருலவு விநாயகனின் பெயரிலன்பர்

பெறவிரும்பும் வரமுதவும் பெருமானாக

காருலவு பொழில் சூழக் கையிலையன்ன

கலைமிளிரக் கோயிலோடு கோபுரங்கள்

பருப்புடனே பால்பழங்கள் தேனும் சேர்த்து

படைத்து வந்து காப்பிட்டுப் பணிந்து வாழ்வோம்

# ஊஞ்சல்பா

01. இருக்கு முதனான் மறைகள் கால்களாக
இலகு உபநிடத முறுஞ்சட்டமாகத்
தருக்கறு சைவாகமமே பலகையாகத்
தந்திடுகல் உபாகமமே விட்டமாக
நெருக்கமுறும் தளரவடம் கயிறதாகத்
நீலமணி மரகதமும் மொளிவைரமோடு
மஞக்கமமு மலர்ப்பொழி சூழ் பூநகர் தன்னில்
கட்டுக்கரை விநாயகரே ஆடீரூஞ்சல்

02. அடியவர்கள் விதிர்விதிர்த்து கரங்கள் கூப்ப
ஆலயத்தின் மணியோசை ஓம் என்றார்ப்ப
குடிமனையில் விநாயகனின் அன்பர் கூட்டம்
குழாம் சூழ்ந்து தோத்திரங்கள் பாடியாட
படியின்மிசை உருண்டடியார் பரவியேத்த
பலமுறையும் குரலெழுப்பி பக்திமேவ
கடிகமமும் களனி சூழ் பூநகர்தன்னில்
கட்டுக்கரை விநாயகரே ஆடீரூஞ்சல்

03. தோற்கருவி துளைக்கருவி நரம்பு யாழ்கள்
தூயவெண் சங்கினொலி மணியின் நாதம்
போற்றி வருமன்பர் தமிழ்மறைகள் ஓத
பூதகணம் சேர்ந்து தேவ மகளீராட
நாற்றிசையும் வேதமொடு ஆகமத்தின்
நாதமெழுந் தென்றலொடு கிளிமாவட்ட
காற்றிசைக்க கனிந்துவரும் பூநகர் தன்னில்
கட்டுக்கரை விநாயகரே ஆடீரூஞ்சல்

04. செழுங்கருணை அறிஞர் பலர் கவிகை தாங்க
சிந்தனை நின் தனக்கானோர் காளாஞ்சியேந்த
தொழும் பரிசில் மிக்கவர்கள் கவரிவீச
தொண்டர் பலர் கமண்டலங்கள் தூக்கிநிற்க
வளம்கொளித்தோர் தாம்பூலம் காளாஞ்சியேந்த
வனப்புமிகு சுமங்கலிகள் வரிசையேந்த
களங்கமிலா அன்பர் உறை பூநகர் மண்ணில்
கட்டுக்கரை விநாயகரே ஆடீரூஞ்சல்.

05. தந்தை சிவன் நாரதனின் மாங்கனியைப் பெற்று
தவப்புதல்வர் கணநாதனொடு முருகனோடும்
வந்திடுக இவ்வுலகதனை முதலில் சுற்றி
வருகவென மயிலேறி வடிவேலன் செல்ல
தந்தைதனை மூன்றுமுறை சுற்றிவந்து
தருகவென மாங்கனியைப் பெற்றநீயும்
முந்தவினைப்பயனாகப் பூநகர் தன்னில்
கட்டுக்கரை விநாயகரே ஆடீரூஞ்சல்.

06. ஓங்கார வடிவழகு ஒளியே வீச
உபயபரி புரமறைகள் உயர்ந்து ஓங்க
நீங்காத அருள்மாரி நிதமும் பெய்ய
நிறைந்து பால் பழவகைகள் தேன்கரும்பு சேர
பாங்கான இருமாதர் பக்கம் சேர
பக்குவமாய் தேவகணம் பரவியேத்த
காங்கேயன் அருகிருந்த ஆலங்கேணி
கட்டுக்கரை விநாயகரே ஆடீரூஞ்சல்.

07. ஆலவட்டம் கொடிகுடைக்குள் அணிசெய்யாக்கம்
அலங்காரம் நலங்காத துலங்கும் பட்டு
கோலமிட்டு கொலுவிருக்கும் கும்பம்விம்பம்

முகூஷிகமும் பலிபீடம் கொடியின் தம்பம்
சீலமிகு அறவோர்கள் செய்யும்பூசை
காலமெல்லாம் காத்தருள பூநகர் தன்னில்
கட்டுக்கரை விநாயகரே ஆடீருஞ்சல்.

08. இந்திரனுக்கிரங்கி யவன் பூங்காவுக்கு
இனிய நறுங்காவிரி நீர் இறைப்பை எண்ணி
தந்திரமாய் காக்கை வடிவாக வந்து
தமிழ் முனிவர் கமண்டலத்தை கவிழ்த்து நீரை
சிந்தவைத்து சிறப்புமிகு சோழதேசம்
சிறந்திடவே புனித கங்கையோடச்செய்து
மந்திர வடிவாக வந்து பூநகர் மண்ணில்
கட்டுக்கரை விநாயகரே ஆடீருஞ்சல்.

09. ஆனைமுகப் பெருமானே ஆடீருஞ்சல்
அரவனு வந்த திருமகனே ஆடீருஞ்சல்
தானை முழுப் பரம்பொருளே ஆடீருஞ்சல்
தமிழ் தந்த வித்தகனே ஆடீருஞ்சல்
ஞானமுதல் தத்துவனே ஆடீருஞ்சல்
ஞாலமுழுதாண்டவனே ஆடீருஞ்சல்
காலமுதக் கையோனே ஆடீருஞ்சல்
கட்டுக்கரை விநாயகரே ஆடீருஞ்சல்

10. அறம் வாழீ அகத்துணர்வில் தூய்மை வாழீ
ஆக்கமிகப் பெற்றுயரும் ஆற்றல் வாழீ
மறம் வாழீ மும்மாரி பொழிந்து வாழீ
மாதர் புகழ் கற்பு நெறி மகிமை வாழீ
திறன் வாழீ திருப்பணிகள் செய்வோர் வாழீ
சீர்வாழீ உலகெங்கும் உறைவோர் வாழீ
சிந்தைதனில் நினைப்போரும் திளைத்து வாழீ
சிவப்பணிகள் சைவநீதி நிலைத்து வாழீ வாழீ.

# ஆலயத்தின் தொன்மையும் பரிபாலனசபைச் செயற்பாடுகளும்



கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்தில் ஆலங்கேணிக் கிராமத்தில் நூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்ற இவ்வாலயம் யாரால் உருவாக்கப்பட்டது என்ற கேள்விக்கு விடை காண முடியாத அளவிற்கு தொன்மை மிக்க ஆலயமாகக் காணப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் இவ்வாலயம் ஓலைக்கொட்டகையில் வைத்து விநாயகப் பெருமானை மக்கள் வழிபட்டு வந்தனர். விநாயகப் பெருமான் தொன்மையான காலத்திலிருந்து மேற்கு நோக்கிய திசையில் பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்தார். சிலர் விநாயகப் பெருமானைக் கிழக்கு நோக்கிய திசையில் வைத்து வழிபடுவதற்கு விரும்பிய போதிலும் விநாயகரது பார்வை மேற்கு நோக்கியே அமையப் பெற்றது. மக்கள் விநாயகப்பெருமானை வழிபட்ட அதே நேரம் வைரவப் பெருமானையும் இவ்வாலயத்தின் எதிர்த்திசையில் வைத்து வழிபட்டு வந்தனர். இவ்வாலயத்தின் பூசகர்களாக அமரர் நல்லதம்பி, அமரர் நவரட்ணம் ஆகியோர் செயற்பட்டு ஆலயத்தைப் பரிபாலித்து வந்தனர். இவர்களுடன் உதவிப் பூசகர்களாக அமரர் சுப்பர் இராமப்பிள்ளை அமரர் வேதவனம் ஆகியோர் செயற்பட்டு இருந்தனர். இவர்களுடைய காலத்தில் அமரர் நாகலிங்கம், அமரர் பரமு ஆறுமுகம், அமரர் கோவிந்தர், அமரர் செல்வராசா, அமரர் வேலுப்பிள்ளை(கச்சாய்), அமரர் பிள்ளையினார், அமரர் அருணாச்சலம், அமரர் மகாதேவா, அமரர் இரத்தினசிங்கம், அமரர் செல்லையா, அமரர் பசுபதி மற்றும் திரு. சோமசுந்தரம், திருமதி.கார்த்திகேசு பூரணம் ஆகியோர் இவ்வாலயத்தின் வளர்ச்சியில் பங்காற்றி வந்தனர். தொடர்ந்து அமரர் நவரட்ணம் அவர்களின் புதல்வர்களான திரு.ந.சிற்றம்பலம், திரு.ந.கந்தையா, திரு.ந.வேலுப்பிள்ளை ஆகியோர் பூசகர்களாக செயற்பட்டு ஆலயத்தினை பராமரித்து வந்தனர்.

*1976*ஆம் ஆண்டு அமரர் ந.நாகலிங்கம் அவர்கள் கிராமத்தில் இருந்த பக்த அடியார்களின் உதவியுடன் இவ்வாலயத்தை மடாலயமாகக் கட்டுவதற்குப் பெரும் பணியாற்றினார். ஆலய



கட்டுமாணப் பணிக்கு கொழும்புத்துறை சுண்டுகுளியைச்சேர்ந்த அமரர் தவமணி அவர்களும் பணவுதவி செய்திருந்தார். 1976ஆம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேக நிகழ்வு சிறப்பாக நடைபெற்றிருந்தது.

பின்பு ஆலயத்தின் பரிபாலன சபை அமைக்கப்பட்டது. தலைவர் திரு சி.தாமோதரம்பிள்ளை, செயலாளர் அமரர் த.முருகேசம்பிள்ளை, பொருளாளர் திரு வே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் செயற்பட்டு ஆலய வளர்ச்சியிலும் பராமரிப்பிலும் பெருந்தொண்டாற்றினர். 1984ஆம் ஆண்டு தலைவர் அமரர் ந. நாகலிங்கம், செயலாளர் அமரர் ப. நகுலேஸ்வரன், பொருளாளர் திரு ஐ.லோக நாதன், உறுப்பினர் திரு. வே.விநாயகமூர்த்தி, திரு. சந்திரசேகரம் ஆகியோரைக் கொண்ட பரிபாலன சபை செயற்பட்டது. இவர்களது செயற்பாட்டில் ஆலயத்திற்கான வேலியமைப்பு மற்றும் ஆலய வளவு மண்நிரப்பி சீர்செய்தமை என்பன இடம்பெற்றுள்ளது.




2000ம் ஆண்டு தலைவர் திரு.ந. கந்தையா செயலாளர் திரு ஐ.லோகநாதன் பொருளாளர் திரு.வே.விநாயகமூர்த்தி உறுப்பினர்களாக திரு.க.சந்திரசேகரம், அமரர்.ப.நகுலேஸ்வரன் ஆகியோர் செயற்பட்டு ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு சிறப்பாக நடைபெற்றிருந்தது. அமரர் ந.நாகலிங்கம் அவர்கள் போசகராக செயற்பட்டிருந்தார்.

பின்னர் தலைவராக திரு.அ.ஐயம்பிள்ளை, செயலாளர் திரு.சு.திருநாவுக்கரசு, பொருளாளர் திரு.ந.சுந்தரமூர்த்தி, உறுப்பினர் திரு. சேதுராசா ஆகியோர் கொண்ட பரிபாலன சபை உருவாக்கப்பட்டு ஆலயம் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. தொடர்ந்து தலைவர் திரு.அ.ஐயம்பிள்ளை, செயலாளர் திரு.பா.குமாரகுலசிங்கம், பொருளாளர் திரு.ந.கோபாலசுந்தரம், உறுப்பினர் திரு.சேதுராசா ஆகியோர் கொண்ட பரிபாலன சபை ஆக்கப்பட்டது. இவர்களது செயற்பாட்டில் ஆலயத்திற்கான காணி உறுதி பெறப்பட்டிருந்தது. அத்துடன் சுற்றுமதில் அமைப்பு மற்றும் மடப்பள்ளி அமைப்பு, அன்னதான மடம் அமைப்பு என்பன இடம்பெற்றிருந்தன.

2009ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் காரணமாக ஆலயத்தின் செயற்பாடுகள், பூசைகள், விழாக்கள் என்பன நடைபெறவில்லை. 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின் ஆலயம்

சிறு சிறு புனர்நிர்மாண செயற்பாடுகளுடன் மீண்டும் செயற்பட ஆரம்பித்து பக்தர்கள் விநாயகப்பெருமானின் அருளினைப் பெற்று வந்தனர்.



2011.03.06 அன்று பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு புதிய பரிபாலனசபை தெரிவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் தலைவர் திரு.சு.சேதுராசா, செயலாளர் திரு.கி.சாந்தரூபன், பொருளாளர் ஐ.லோக நாதன் உபசெயலாளர் திரு.க.நிமலன், உறுப்பினர்கள் திரு.ந.கோபாலசுந்தரம், திரு.அ.ஐயம்பிள்ளை, திரு.பா.குமாரகுலசிங்கம், அமரர்.ப.நகுலேஸ்வரன், திரு.சிவகுமார், திரு.வி.துரைசிங்கம், திரு.கா.தங்கராசா தெரிவுசெய்யப்பட்டனர். போசகராக திரு.இரத்தினசிங்கமும் உள்ளகக் கணக்காளராக திரு.ப.ஆனந்தராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். ஆலயத்தின் அனைத்து விழாக்களும் பூசைகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. இக்காலத்தில் குறிப்பாக ஆலயம் பதிவு செய்யப்பட்டமையைக் குறிப்பிடலாம். தொடர்ந்து 11.03.2012 அன்று பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு புதிய பரிபாலனசபைத் தெரிவு இடம்பெற்றது. அதன் பிரகாரம் தலைவராக மீண்டும் திரு.சு.சேதுராசா, செயலாளர் திரு.கி.சாந்தரூபன், பொருளாளராக திரு.ஐ.லோகநாதன், உபதலைவர் திரு.க.சந்திரசேகரம், உபசெயலாளர் திரு. பா.குமாரகுலசிங்கம், உறுப்பினர்கள் திரு.கு.ரவிச்சந்திரன், திரு.க.சிவகுமார், திரு. மு. உதயகுமார், திரு.வே.விநாயகமூர்த்தி, திரு.தி.கிருஸ்ணசாமி, திருமதி.த.சிவமலர், திருமதி.சி.பூமணிதேவி, திருமதி.செ.சிவபாக்கியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப் பரிபாலன சபையின் முக்கிய செயற்பாடுகளாக,

1. 2012.05.02 அன்று ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டது.
2. ஆலயம் முழுமையாக புதிதாக மீளமைக்கப்பட்டு 17.06.2016 வெள்ளிக்கிழமை விசாக நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 6.40 மணி முதல் 07.52 மணி வரையில் உள்ள மிதுனலக்கின சுபவேளையில் மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது.

ஆலய வரலாற்றில் 17.06.2016 அன்று நடைபெற்ற மஹாகும்பாபிஷேக நிகழ்வு மிக மிகச்சிறப்பு மிக்க விடயமாக அமைகின்றது. பரிபாலன சபை தலைவர் திரு.சு.சேதுராசா, செயலாளர் திரு. கி.சாந்தரூபன், பொருளாளர் திரு.ஐ.லோகநாதன் ஆகியோர் மிகவும் சிறப்பாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளனர். இவர்களுடன் ஆலயத்தின் எக்கருமங்களிலும் தம்மை முழுமையாக

ஈடுபடுத்தியவர்களாக திரு.க.சந்திரசேகரம், திரு.தி.கிருஸ்ணசாமி, திரு.வே.விநாயகமூர்த்தி ஆகியோரையும் குறிப்பிட வேண்டும். அத்துடன் திரு.க.சுப்பிரமணியம், திரு.க.நிமலன், திரு. கா.தங்கராசா, திரு.கு.ரவிச்சந்திரன், திரு. செ.செல்வரத்தினம், திரு.சோ.மனோகரன், திரு.து.நந்தகுமார், திரு.சி.சுதாகரன், திரு.ஆ.யோகநாதன், திரு.பா.குமாரகுலசிங்கம், திரு.கு.துவாரகன், திரு.மோகனராசா, செல்வன்.ச.எழிலன், செல்வன்.ர.லக்சன், செல்வன் இ.நிறோஜன், செல்வன்.க.வேணுஜன், திரு.யோ. முகுந்தன், திரு.யோ.மயூரன், திரு.சு.வசந்தன், திரு. தி.அருள், திரு.து.செல்வரத்தினம், திரு.த.சிவகுமார், திரு.மு.உதயகுமார், திரு.அ.கந்தையா, திரு.வினோத், செல்வன்.பா.பிரசாத், செல்வன்.பா.பிரஜீவன், திரு. சோ.மனோகரன், திரு.சோ.சதீஸ், திரு.கோ.நவசுதன், செல்வன்.சே.சயந்தன், செல்வன் த.தனு ஆகியோர் பரிபாலன சபையுடன் இணைந்து கும்பாபிஷேக நிகழ்வு சிறப்பாக நடைபெற தங்களால் இயன்ற உதவிகளைச் செய்துள்ளனர்.





# ஆலய மீள்கட்டுமாணப்பணிக்கு நிதி பங்களிப்புச் செய்தோர்

| | பெயர் | முகவரி | தொகை |
|---|---|---|---|
| | சிற்றம்பலம் சுதாஸ்கரன் | சுவிஸ் | 155000.00 |
| | சோமசுந்தரம் சிவபாலன் | லண்டன் | 200440.00 |
| | பிரதேச செயலகம் | நல்லூர் யாழ்ப்பணம் | 5000.00 |
| | வேலுப்பிள்ளை ஜேந்தன் | நோர்வே | 100000.00 |
| | சோமலிங்கம் விஜயகாந்தன் | கனடா | 10000.00 |
| | அனுஷா குமார் | கனடா | 30000.00 |
| | சிற்றம்பலம் யஷோதரன் | லண்டன் | 70650.00 |
| | கந்தையா சிறீதரன் | சுவிஸ் | 150000.00 |
| | வயித்திலிங்கம் கந்தையா | ஆலங்கேணி | 2000.00 |
| | நவரத்தினம் கோபாலசுந்தரம் | ஆலங்கேணி | 7000.00 |
| | தம்பிபிள்ளை இரத்தினசிங்கம் | ஆலங்கேணி | 51000.00 |
| | கந்தையா கனகரத்தினம் | ஆலங்கேணி | 1100.00 |
| | விநாசித்தம்பி தனபாலசிங்கம் | நல்லூர் பூநகரி | 1000.00 |
| | தில்லையம்பலம் கிருஸ்ணசாமி | ஆலங்கேணி | 3000.00 |
| | திருமதி கிருஸ்ணசாமி | ஆலங்கேணி | 500.00 |
| | திருமதி தையல்நாயகி முருகேசம்பிள்ளை | ஆலங்கேணி | 31000.00 |
| | தங்கராசா சிவமலர் | ஆலங்கேணி | 600.00 |
| | நவரத்தினம் சிற்றம்பலம் | ஆலங்கேணி | 1000.00 |
| | செல்வராசா சிவபாக்கியம் | ஆலங்கேணி | 2150.00 |
| | திரு.திருமதி.இராசகுலசிங்கம் | லண்டன் | 150000.00 |
| | குமாரகுலசிங்கம் அனுசன் | சுவிஸ் | 50000.00 |
| | பசுபதி ஆச்சிமுத்து | கிளிநொச்சி | 3000.00 |
| | தாமோதரம்பிள்ளை ஜெகதீசன் | கிளிநொச்சி | 75000.00 |
| | முத்ததம்பி சிவறஞ்சன் | கச்சாய், சாவகச்சேரி | 12110.00 |
| | கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் | ஆலங்கேணி | 21000.00 |
| | கிருஸ்ணசாமி சாந்தரூபன் | கிளிநொச்சி | 42860.00 |
| | திரு.திருமதி. கவிதா ஸ்ரீஸ்கந்தராசா | சுவிஸ் | 100000.00 |
| | சிற்றம்பலம் தயாகரன் | லண்டன் | 60000.00 |
| | வேதவனம் பாலசுப்பிரமணியம் | நல்லூர், யாழ்ப்பாணம் | 50000.00 |
| | சற்குணராசா | வாடியடி, பூநகரி | 10000.00 |

| | | | |
|---|---|---|---|
| | திரு.திருமதி யஷோதாரணி சிவதாஸ் | பிரான்ஸ் | 25000.00 |
| | திருமதி நகுலாம்பிகை திருவாசகம் | அவுஸ்திரேலியா | 150000.00 |
| | திருமதி க.பரமேஸ்வரி | வாடியடி பூநகரி | 10000.00 |
| | திரு.கு.பார்த்தீபன் | வாடியடி பூநகரி | 2000.00 |
| | திரு திருச்செல்வம் தவச்செல்வன் | பிரான்ஸ் | 200000.00 |
| | தாமோதரம்பிள்ளை ஜெயபாலன் | லண்டன் | 100000.00 |
| | திருச்செல்வம் கலைச்செல்வம் | பிரான்ஸ் | 40420.00 |
| | பேரம்பலம் சின்னத்தம்பி | பிரான்ஸ் | 16168.00 |
| | பேரம்பலம் பாலசுந்தரம் | பிரான்ஸ் | 8084.00 |
| | விஜயன் பிரேமா | பிரான்ஸ் | 8084.00 |
| | சோ.சோமகாந்தன் | பிரான்ஸ் | 4042.00 |
| | சோ.சோபிகன் | பிரான்ஸ் | 4042.00 |
| | க.இராசலிங்கம் | பிரான்ஸ் | 8084.00 |
| | க.பாலசுப்பிரமணியம் | பிரான்ஸ் | 40420.00 |
| | ஜதீஸ் மைதிலி | பிரான்ஸ் | 16168.00 |
| | கு.விசு | பிரான்ஸ் | 3233.00 |
| | ந.கோபிநாத் | வவுனியா | 20000.00 |
| | ந.சிவநாதன் | கொழும்பு | 25000.00 |
| | திரு.திருமதி யசோதினி ஜெயக்குமார் | சுவிஸ் | 25000.00 |
| | திரு.திருமதி ராஜினி குமாரகுலசிங்கம் | லண்டன் | 154000.00 |
| | கணபதிப்பிள்ளை முத்தையா | | 25000.00 |
| | விஜயகாந்தன் சுபிகரன் | இந்தியா | 1500.00 |
| | து.நடேஸ்வரன் | அத்தாய், பூநகரி | 50000.00 |
| | திரு.திருமதி ஜெயகௌரி பெனடிற்க் | கிளிநொச்சி | 50000.00 |
| | கார்த்திகேசு தங்கராசா | ஆலங்கேணி | 10000.00 |
| | சி.விமலேஸ்வரி | கிளிநொச்சி | 1000.00 |
| | நாகலிங்கம் பேரம்பலம் | அவுஸ்திரேலியா | 1000.00 |
| | நவரத்தினம் சிவகுமார் | ஆலங்கேணி | 9000.00 |
| | திருமதி இரா.சாமினி | சுவிஸ் | 50000.00 |
| | பரமு கிருஸ்ணகுமார் | சுவிஸ் | 30000.00 |
| | திருமதி தரிஷா | கனடா | 30000.00 |
| | க.பொன்னம்மா | கச்சாய், சாவகச்சேரி | 8500.00 |
| | திருமதி பொன்னம்பலம் | இணுவில் | 60000.00 |
| | செல்வி கிருஸ்ணசாமி தஜிகா | ஆலங்கேணி | 5000.00 |
| | கார்த்திகேசு பூரணம் | ஆலங்கேணி | 1000.00 |

| | | | |
|---|---|---|---|
| | நிக்காஸ் அழகு நிலா படமாடம் | கிளிநொச்சி | 10000.00 |
| | வேலுப்பிள்ளை கஜீதன் | நோர்வே | 40000.00 |
| | பொ.பிரகலாதன் | கிளிநொச்சி | 5000.00 |
| | திருமதி நிசா சாந்தரூபன் | கிளிநொச்சி | 1000.00 |
| | திருமதி தி.சிவகுமாரி | கிளிநொச்சி | 11000.00 |
| | செல்வராசா சிவரஞ்சன் | சுவிஸ் | 100000.00 |
| | செல்வரத்தினம் ரஜனிகாந்த் | லண்டன் | 30000.00 |
| | பாலசுப்பிரமணியம் புஸ்பவதி | சுவிஸ் | 3000.00 |
| | நவரத்தினம் சிவபாதசுந்தரம் | சுவஸ் | 80000.00 |
| | வேதவனம் விநாயகமூர்த்தி | ஆலங்கேணி | 11500.00 |
| | துரைசிங்கம் ஜெயக்குமார் | முக்கொம்பன், பூநகரி | 35000.00 |
| | திரு.திருமதி வினோத் சசி | முக்கொம்பன், பூநகரி | 3000.00 |
| | தியாகேஸன் குமணன் | நல்லூர், பூநகரி | 2500.00 |
| | யோகராசா | உடையார்கட்டு | 11000.00 |
| | திரு.திருமதி மனோன்மணி | ஜேர்மன் | 100000.00 |
| | அருள்செந்தூரன் | சுவிஸ் | 3000.00 |
| | நாகேந்திரம் பால்ராஜ் | 155, கிளிநொச்சி | 5000.00 |
| | திரு.திருமதி தர்சினி ஸ்ரீஸ்குமார் | லண்டன் | 70000.00 |
| | பா.சுலக்ஜ்ஷனா | செல்விபுரம், பூநகரி | 12000.00 |
| | பரராஜசிங்கம் சுரேஸ் | நெளுக்குளம், வவுனியா | 10000.00 |
| | பாலசிங்கம் குமாரகுலசிங்கம் | ஆலங்கேணி | 105000.00 |
| | செல்வரத்தினம் நித்தியஅகிலன் | முட்கொம்பன், பூநகரி | 5000.00 |
| | செல்வராசா சிவசாந்தன் | லண்டன் | 150000.00 |
| | செல்வரத்தினம் ஜெயசீலன் | வவுனியா | 3000.00 |
| | செல்லையா திலீபரன் | கிளிநொச்சி | 15000.00 |
| | தங்கராசா துஸ்யந்தன் | சுவிஸ் | 50000.00 |
| | செல்வரத்தினம் தியாகேசன் | கிளிநொச்சி | 8000.00 |
| | தங்கராசா நிஸ்யந்தன் | லண்டன் | 50000.00 |
| | சி.சிவானந்தம் | வாடியடி, பூநகரி | 57500.00 |
| | சோமலிங்கம் மனோகரன் | ஆலங்கேணி | 25000.00 |
| | சோமசுந்தரம் சிவதாசன் | லண்டன் | 300000.00 |
| | திரு.திருமதி பவானி கமலேஸ்வரன் | சுவிஸ் | 150000.00 |
| | திரு.திருமதி ரவி காமினி | | 10000.00 |
| | அஞ்சலோ நியூட்டன் | பிரான்ஸ் | 10000.00 |
| | திரு.திருமதி சோதிமலர் சிவநேசன் | சுவிஸ் | 35000.00 |

| | | | |
|---|---|---|---|
| | புஸ்பராணி | வவுனியா | 3850.00 |
| | திரு.திருமதி ஜெ.சுதர்சா | லண்டன் | 50000.00 |
| | செல்லையா செல்வரத்தினம் | ஆலங்கேணி | 5000.00 |
| | சதாசிவம் சிவபாக்கியம் | ஆலங்கேணி | 5000.00 |
| | உமாகாந்தன் சுரேகா | கனகாம்பிகை, கிளிநொச்சி | 5000.00 |
| | நவரத்தினம் கணேசமூர்த்தி | வாடியடி, பூநகரி | 5000.00 |
| | கந்தையா பரமேஸ்வரி | வாடியடி, பூநகரி | 3000.00 |
| | இராசேந்திரம் கிருபாகரன் | வாடியடி, பூநகரி | 1000.00 |
| | தங்கராசா கஜந்தன் (தனு) | சுவிஸ் | 55000.00 |
| | ப.ஆனந்தராசா | ஆலங்கேணி, பூநகரி | 37000.00 |
| | காந்தரூபன் மகிந்தா | யாழ்ப்பாணம் | 5000.00 |
| | விநாயகமூர்த்தி சாந்தமூர்த்தி | நல்லூர், பூநகரி | 5000.00 |
| | சங்கரப்பிள்ளை துரைசிங்கம் | இந்தியா | 10000.00 |
| | நல்லதம்பி செல்லம்மா | கொக்குவில், யாழ்ப்பாணம் | 5000.00 |
| | சோமசுந்தரம் சிவரூபன் | சுவிஸ் | 130000.00 |
| | நிக்ஸா காந்தரூபன் | லண்டன் | 6000.00 |
| | விஜயகாந்தன் பகீகரன் | லண்டன் | 5000.00 |
| | திருமதி முகுந்தன் யசிந்தா | முக்கொம்பன், பூநகரி | 10000.00 |
| | விநாசித்தம்பி துரைசிங்கம் | முக்கொம்பன், பூநகரி | 20000.00 |
| | மனோகரன் தரிசன் | கனடா | 5000.00 |
| | செல்வி சேதுராசா சபிதா | கனடா | 20000.00 |
| | திரு.திருமதி நளாயினி ராதிகன் | ஆலங்கேணி, பூநகரி | 20500.00 |
| | அருணாச்சலம் ஐயம்பிள்ளை | ஆலங்கேணி, பூநகரி | 2000.00 |
| | கஜந்தா குடும்பம் | ஆலங்கேணி, பூநகரி | 1000.00 |
| | முருகேசு சிவமலர் | சாவகச்சேரி, மீசாலை | 5000.00 |
| | விஜயகலா ஸ்ரீகுதாகரன் | சாவகச்சேரி, மீசாலை | 5000.00 |
| | நல்லதம்பி ரவிச்சந்திரன் | கொக்குவில், யாழ்ப்பாணம் | 10000.00 |
| | தம்பிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் | சாவகச்சேரி | 5000.00 |
| | திரு.திருமதி கிருசா மயூரன் | முக்கொம்பன், பூநகரி | 50000.00 |
| | மகேஸ்வரன் கஜனி | கச்சாய், சாவகச்சேரி | 5000.00 |
| | மனோகரன் நசாந்தி | கனடா | 11000.00 |
| | சோமசுந்தரம் சிவநேசன் | | 30000.00 |
| | சோமசுந்தரம் மனோகரன் | சாவகச்சேரி, மீசாலை | 2000.00 |
| | கந்தையா சசிகரன் | லண்டன் | 50000.00 |
| | ஐயாத்துரை விஜயநாதன் | இந்தியா | 4000.00 |

| | | | |
|---|---|---|---|
| | மகாலிங்கம் கணேசலிங்கம் | ஆலங்கேணி, பூநகரி | 1000.00 |
| | விக்னேஸ்வரன் சயந்தன் | | 20000.00 |
| | சோதி | சுவிஸ் | 20000.00 |
| | நவரத்தினம் பரமு | கொக்குவில், யாழ்ப்பாணம் | 10000.00 |
| | திருநாவுக்கரசு கிருஸ்ணவேணி | கொக்குவில், யாழ்ப்பாணம் | 10000.00 |
| | கனகசுகிர்ஜா ரவிச்செல்வன் | உடுவில், யாழ்ப்பாணம் | 5000.00 |
| | ஆறுமுகம் கோடீஸ்வரன் | வைரப்புளியங்குளம், வவுனியா | 10000.00 |
| | சதாசிவம் குடும்பம் | ஆலங்கேணி, பூநகரி | 100000.00 |
| | முருகேசு ஜெயக்குமார் | பாலியாறு வெள்ளாங்குளம் | 5000.00 |
| | இந்திரா சுந்தரமூர்த்தி | உதயநகர், கிளிநொச்சி | 10000.00 |
| | பரராஜசிங்கம் விஜயகுமாரி | ஆலங்கேணி, பூநகரி | 2000.00 |
| | நவரத்தினம் நல்லதம்பி | கொக்குவில், யாழ்ப்பாணம் | 10000.00 |
| | செல்வரத்தினம் சாரங்கன் | லண்டன் | 120000.00 |
| | க.சேதுலிங்கம் குடும்பம் | கச்சாய் சாவகச்சேரி | 21500.00 |
| | த.இராஜேந்திரம் | வாடியடி, பூநகரி | 50000.00 |
| | சிவராசசிங்கம் சாந்தினி | இந்தியா | 35000.00 |
| | விநாயகமூர்த்தி செந்தூரன் | ஆலங்கேணி, பூநகரி | 5000.00 |
| | கணபதிப்பிள்ளை வீரசிங்கம் | ஆலங்கேணி, பூநகரி | 2000.00 |
| | கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரன் | பிரான்ஸ் | 10000.00 |
| | கோபாலசுந்தரம், செல்வரத்தினம் | [illegible] திருப்பணி [illegible] | 324945.00 |
| | செல்வி ஜென்சிகா பெனடிக் | கிளிநொச்சி | 50000.00 |
| | தர்மலிங்கம் செல்வகணபதி | தமிழ்நாடு, இந்தியா | 2000.00 |
| | இரத்தினசிங்கம் பாக்கியநேசன் | லண்டன் | 25000.00 |
| | வைத்தீஸ்வரன் புஸ்பலட்சுமி | டென்மார்க் | 20000.00 |
| | பரமநாதன் நகுலநாதன் | வவுனியா | 5000.00 |
| | சேதுராசா சயந்தன் | ஆலங்கேணி பூநகரி | 10000.00 |
| | திரு.திருமதி குகன் சாந்தி | சுவிஸ் | 30000.00 |
| | இந்திரமோகன் கஜந்தா | அளவெட்டி, யாழ்ப்பாணம் | 10000.00 |
| | காசிநாதர் மகேஸ்வரன் | சுவிஸ் | 25000.00 |
| | சிதம்பரப்பிள்ளை ஆனந்தராசா | ஆலங்கேணி, பூநகரி | 1000.00 |
| | கதிர்காமு சிவகுமார் | அல்லாரை தெற்கு, மீசாலை | 2000.00 |
| | நியூட்டன் சிந்துஜா | இளவாலை, யாழ்ப்பாணம் | 5000.00 |
| | சண்முகம் கற்பகம் | கனகாம்பிகை கிளிநொச்சி | 10000.00 |
| | நவரத்தினம் வேலுப்பிள்ளை | ஸ்கந்தபுரம், கிளிநொச்சி | 50000.00 |
| | ஐயம்பிள்ளை பிரபாகரன் | ஜேர்மன் | 25000.00 |

| | | | |
|---|---|---|---|
| | வி.கீர்த்தனா | ஆலங்கேணி, பூநகரி | 1000.00 |
| | வேலாயுதம் ஞானரத்தினம் குடும்பம் | வேலணை, மண்கும்பான் | 25000.00 |
| | ந.மோகனராசா குடும்பம் | ஆலங்கேணி, பூநகரி | 5000.00 |
| | பொன்னுத்துரை சோமசுந்தரம் | ஆலங்கேணி, பூநகரி | 2000.00 |
| | இராசையா சிவராசா | நோர்வே | 5000.00 |
| | திருமதி சூரியகுமார் நந்தினி | இந்தியா | 5000.00 |
| | திருமதி சதீஸ்குமார் குமுதினி | சாவகச்சேரி | 5000.00 |
| | சோமலிங்கம் விஜயகுமார் | சுவிஸ் | 15000.00 |
| | பெருமாள் சிவகுமார் | யாழ்ப்பாணம் | 2000.00 |
| | நகுலேஸ்வரன் டினோஜன் | கொக்குவில், யாழ்ப்பாணம் | 7500.00 |
| | த.நிலோஜன் | நல்லூர், பூநகரி | 5000.00 |
| | லோகநாதன் நிருஜன் | அவுஸ்ரேலியா | 50000.00 |
| | சிவநேசன் குடும்பம் | ஆலங்கேணி பூநகரி | 25000.00 |
| | மணியம்மா குடும்பம் | ஜெயந்திநகர், கிளிநொச்சி | 5000.00 |
| | வவா மாமா | கல்வயல், சாவகச்சேரி | 1000.00 |
| | செல்வி தங்கராசா கஜிதா | ஆலங்கேணி, பூநகரி | 5000.00 |
| | இந்து கலாசார திணைக்களம் | இலங்கை | 200000.00 |
| | நவரத்தினம் கந்தையா | ஆலங்கேணி, பூநகரி | 300000[redacted].00 |
| | கந்தையா விஜயகுமார் | லண்டன் | 100000[redacted].00 |

# ஆலயத்திற்கு உபயம் அளித்தோர்.

| இல | பெயர் | முகவரி | வழங்கப்பட்டபொருள் |
|---|---|---|---|
| | திருமதிகோகிலா நகுலேஸ்வரன் | கொக்குவில், யாழ்ப்பாணம் | மூலஸ்தான கோபுரத்தில் கிழக்கு முகமாக காட்சி தருகி-ன்ற பிள்ளையார் திருவுரும் |
| | பரராசசிங்கம் சுதர்சன் | நெளுக்குளம், வவுனியா | மூலஸ்தானகோபுரத்தில் வடக்கு முகமாககாட்சி தருகின்ற பிள்ளையார் திருவுருவம் |
| | விநாசித்தம்பி துரைசிங்கம் | முக்கொம்பன்,. பூநகரி | மூலஸ்தானகோபுரத்தில் தெற்குமுகமாககாட்சி தருகின்ற தட்சணாமூர்த்தி யுடன் கூடிய காட்சி |
| | செல்வராசா சிவபாக்கியம் | ஆலங்கேணி, பூநகரி | வடக்குப்புறமாக இருக்கி-ன்றஉற்சவமூர்த்திமண்டபத்-தின் கோபுரத்தில் உள்ள பிள்ளையார் திருவுருவம் |
| | தங்கராசா கஜந்தன் | சுவிஸ் | உற்சவமூர்த்திமண்டப கோபுர-த்தில் கிழக்குமுகமாககாட்சி தருகின்றசரஸ்வதி |
| | றஜீபன் வதனி | சுவிஸ் | உற்சவமூர்த்திமண்டப கோபுர-த்தில் மேற்கு முகமாக உள்ள மகாலட்சுமி திவுருவம் |
| | நவரத்தினம் கணேசமூர்த்தி | வாடியடி, பூநகரி | மணிக்கோபுரத்தில் வடக்கு முகமாக காட்சி தருகின்ற நர்த்-தன கணபதி திருவுருவம் |
| | நவரத்தினம் வேலுப்பிள்ளை | ஸ்கந்தபுரம், கிளிநொச்சி | மூலமூர்த்தியாக விளங்கும் பிள்ளையாரின் ஆசனக்கல் |
| | திருமதி இந்திரகுமார் குடும்பம் சற்குணராசா குடும்பம் | வாடியடி, பூநகரி | தரிசனமண்டப முகப்புப்பகுதியில் காட்சி தருகின்ற சிவன் உமை திருவுருவம் |
| | பரமு ஆறுமுகம் | அத்தாய், பூநகரி | ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள தம்பமண்டபம் |
| | சிற்றம்பலம் யஷோதரன் ரித்வித் | லண்டன் | காண்டாமணி |
| | சிற்றம்பலம் தயாகரன் | லண்டன் | முருகன் மண்டபம் மற்றும் முருகன் தெய்வானை வள்ளி விக்கிரகங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | நாகேந்திரம், மாணி-க்கவாசகர் குடும்பம், | ஆலங்கேணி,பூநகரி | வசந்தமண்டபம் |
| | திரு.பாலசிங்கம் குமாரகுலசிங்கம் | ஆலங்கேணி,பூநகரி | மணிக்கோபுரத்திற்கான தீந்தை வேலை |
| | வேதவனம் பாலசுப்பிரமணியம் | நல்லூர்,யாழ்ப்பாணம் | பிள்ளையார் மண்டபத்திற்கான 4 கதவுகள் |
| | தாமோதரம்பிள்ளை ஜெகதாசன் | கிளிநொச்சி | பெரியகுத்துவிளக்குகள் 2 |
| | காந்தரூபன் மகிந்தா | லண்டன் | மணிகோபுரகிழக்குமுகப் பிள்ளையார் |
| | முகுந்தன் யசிந்தா | முக்கொம்பன்,பூநகரி | ஆலவட்டம்,கும்பசெட் |
| | பாலசுப்பிரமணியம் புஸ்பவதி | பிரான்ஸ் | 4குடம், 2தட்டுக்கள் |
| | விநாயகமூர்த்தி மதுரா | ஆலங்கேணி | 1குடம் |
| | விநாயகமூர்த்தி சிந்துஜன் | ஆலங்கேணி | 1குடம் |
| | செ.செல்வரத்தினம் | ஆலங்கேணி | அடுக்குதீபம், வில்வதீபம் |
| | கா.பூரணம் | ஆலங்கேணி | களாஞ்சி, பஞ்சபாத்திரம் |
| | பரராசசிங்கம் சுதர்சன் | வவுனியா | ஊஞ்சல் |
| | சிற்றம்பலம் | ஆலங்கேணி | அன்னதானமடம் |
| | தையல்நாயகி முருகேசம்பிள்ளை | யாழ்ப்பாணம் | 1 தங்கசெயின் |
| | அ.ஐயம்பிள்ளை | ஆலங்கேணி | மடப்பள்ளி |
| | சிற்றம்பலம் சுதாஸ்-கரன் | சுவிஸ் | கும்பாபிஷேகநிகழ்வுகளின் வீடியோ |

# கும்பாபிஷேக நிகழ்விற்கு
# நிதியுதவி செய்தோர்

| | | | |
|---|---|---|---|
| கா.தங்கராசா - | 1111 | சி.ராதிகன் | 1000 |
| யோ.மயூரன் - | 1000 | கி.யோகலிங்கம் | 500 |
| செ.யோகராசா | 500 | வி.சாந்தமூர்த்தி | 2000 |
| கு.சுப்பிரமணியம் | 500 | தி.ஆருட்செல்வன் | 1000 |
| க.பிரபாகரன் | 500 | செ.கேதீஸ்வரன் | 300 |
| செ.நித்திய அகிலன் | 2000 | ப.சுகதீஸ்வரன் | 100 |
| கண்ணன் | 100 | சு.கிஸ்ணராசா | 500 |
| வ.தவகுலசிங்கம் | 100 | கு.விவேகானந்தன் | 100 |
| சோ.மனோகலன் | 1000 | வி.துரைசிங்கம் | 3000 |
| அ.கௌரிசன் | 500 | சு.சிவபாலசுந்தரம் | 1000 |
| சி.தாமோதரம்பிள்ளை | 1000 | க.கிருஸ்ணராசா | 500 |
| சண்முகவிக்கினராசா | 500 | ச.கதிர்காமசாமி | 500 |
| சூ.சண்முகநாதன் | 100 | க.இராசன் | 200 |
| இ.வாசுமதி | 100 | த.வசந்தகுமார் | 1000 |
| ஐ.துரைராசா | 1000 | த.ரவீந்திரன் | 500 |
| ம.ஜெயானந்தன் | 500 | ந.வடிவேலு | 200 |
| யோ.முருகானந்தன் | 500 | ஆ.யோகானந்தன் | 5000 |
| வை.கதிரவேலு | 4000 | நி.சிவபாலன் | 5000 |
| து.செல்வரத்தினம் | 1000 | க.நிர்மலன் | 1000 |
| த.இரத்தினசிங்கம் | 25000 | கு.ரவிச்சந்திரன் | 1000 |
| வே.பாலசுப்பிரமணியம் | 500 | கோ.சுதன் | 500 |
| செ.சிவபாக்கியம் | 1000 | கா.பூரணம் | 100 |
| ஐ.கனகரத்தினம் | 2000 | க.ரவீந்திரன் | 1000 |
| ந.சிற்றம்பலம் | 1000 | வே.விநாயகமூர்த்தி | 1000 |

| | | | |
|---|---|---|---|
| அ.ஐயம்பிள்ளை | 5000 | அ.சச்சிதானந்தம் | 10000 |
| கு.நந்நகுமார் | 500 | க.கணேசமூர்த்தி | 500 |
| இ.சந்தானவடிவேல் | 1000 | க.கருணா | 200 |
| வெ.இ.தங்கராசா | 500 | ப.ஆனந்தராசா | 2500 |
| க.கந்தையா | 2000 | சே.திலீபரன் | 15000 |
| ப.ஆச்சிமுத்து | 3000 | லோ.ராஜனி | 25000 |
| ப.கோணேஸ்வரன் | 5000 | கா.பால்ராஜ் | 500 |
| கி.கிறிஸ்ரலன் | 200 | சு.நாகேந்திரன் | 500 |
| செ.சிவயோகநாதன் | 500 | க.பரமசாமி | 500 |
| சு.இராகேஸ்வரி | 500 | ச.கணேசலிங்கம் | 200 |
| இ..தனபாலசிங்கம் | 1000 | த.ஜெகன் | 200 |
| ச.பாலசிங்கம் | 500 | சு.புபாலசிங்கம் | 200 |
| ம.கணேசலிங்கம் | 500 | க.காண்டீபன் | 1000 |
| வாசுதேவன் | 500 | க.பரமேஸ்வரன் | 1000 |
| வீ.சிவானந்தன் | 1000 | சோ.மனோகரன் | 2000 |
| செ.செல்வரத்தினம் | 1000 | செ.ஜெயசீலன் | 1000 |
| க.சிவகுமார் | 2000 | கு.துவாரகன் | 1000 |
| வினோத் சசி | 1000 | ந.கோபாலசுந்தரம் | 1500 |
| கோ.நவசீலன் | 1000 | கோ.குகநேசன் | 1000 |
| கோ.நவநீதன் | 1000 | கோ.நவசுதன் | 1500 |
| | 500 | க.மோகனசிங்கம் | 1000 |
| செல்வராசா | 500 | சி.தேவராசன் | 4000 |
| ச.சண்முகநாதன் | 500 | இ.செல்வராசா | 500 |
| தம்பிராசா | 100 | செ.தியாகேசன் | 1000 |
| தி.வாசுதேவன் | 200 | தா.கிருஸ்ணப்பிள்ளை | 200 |
| க.மருதலிங்கம் | 200 | க.மாணிக்கவாசகர் | 500 |
| ந.சரஸ்வதி | 100 | விஜிகரன் | 1000 |
| கு.விஜயரத்தினம் | 2000 | க.யோகராசா | 500 |
| ரா.ஜோஸ் கண்ணன | 000 | கு.பாஸ்கரன் | 1000 |

| | | | |
|---|---|---|---|
| ராஜ்குமார் | 500 | ந.பூமணி | 500 |
| ப.மகேஸ்வரன் | 000 | மாகாலிங்கம் | 5000 |
| இராசலிங்கம் | 1000 | ச.தயாழன் | 1000 |
| செ.நடேசு | 1000 | செ.இரசரத்தினம் | 500 |
| ஆ.பாலகிஸ்ணன் | 5000 | ஆ.பாலச்சந்திரன் | 5000 |
| வா.கார்த்திகேசு | 1000 | பத்மாகுடும்பம் | 5000 |
| க.பரமு | 5000 | த.யோகராசா | 5000 |
| உதயகுமார்சாந்தி | 500 | சு.பரமேஸ்வரன் | 1000 |
| வி.பூபாலசிங்கம் | 5000 | க.ஆனந்தவடிவேல் | 5000 |
| செ.ஜெயசீலன் | 3000 | கு.சண்முகலிங்கம் | 500 |
| த.பாலசுப்பிரமணியம் | 1000 | பு.நடராசா | 100 |
| ம.சசிதரன் | 500 | சரஸ்வதிசதாசிவம் | 1000 |

# மண்டலாபிஷேக உபயகாரர்கள்

1ம் நாள்- க.நிமலன் குடும்பம்

2ம் நான்- பா.குமாரகுலசிங்கம் குடும்பம்,

ப. ஆனந்தராசா குடும்பம், யோ.முகுந்தன் குடும்பம்,

கு.அனுசன் குடும்பம்

3ம் நாள் - மு.சிவமலர்குடும்பம்

4ம்நாள் - தெ.திருச்செல்வம் குடும்பம்

5ம்நாள் - திருமதி. செ.சிவபாக்கியம் குடும்பம்

6ம்நாள் - சதாசிவம் குடும்பம்



7ம்நாள் - த.இரத்தினசிங்கம் குடும்பமும் உறவினர்களும்

8ம்நாள் - ந.சிற்றம்பலம் குடும்பம்

9ம்நாள் - ஆ.பாலகிருஸ்ணன் குடும்பமும் உறவினர்களும்

10ம்நாள் - நவரத்தினம் குடும்பமும் பிள்ளைகளும்

28.06.2016 சங்காபிஷேகம்

இரவுப்பூசை - வே.விநாயகமூர்த்தி குடும்பம்,

வே.பாலசுப்பிரமணியம் குடும்பம், மயூரன் குடும்பம்

# ஆலங்கேணி - கட்டுக்கரை வீரகத்தி விநாயகர் ஆலய மாதாந்த பூசை உபயகாரர்கள்

தை - ந.கோபாலசுந்தரம் குடும்பம்

மாசி - தி.தர்சினி குடும்பம், து.நந்நகுமார் குடும்பம்

பங்குனி - செ.சிவபாக்கியம் குடும்பம்

சித்திரை - ந.கந்தையா குடும்பம்

வைகாசி - ப.ஆனந்தராசா குடும்பம்,யோ.முகுந்தன் குடும்பம்

ஆனி - த.நாகேந்திரம் குடும்பம்

ஆடி - கா.தங்கராசா குடும்பம் ,பே.திருச்செல்வம் குடும்பம்

ஆவணி - ,கணேசமூர்த்தி குடும்பம், சதாசிவம் குடும்பம்


புரட்டாதி – மு.தையல்நாயகி குடும்பம்

ஐப்பசி - ந.சிற்றம்பலம் குடும்பம்

கார்த்திகை - ச.கற்பகம் குடும்பம், சற்குணராசா குடும்பம்

மார்கழி – கதிரவேலு குடும்பம், ரவீந்திரன் குடும்பம்

# விநாயகர் வழிபாட்டுச் சிறப்பு



இந்து மக்களுடைய முதல் வழிபாட்டிற்குரிய தெய்வமாக விளங்குகின்றவர் விநாயகப் பெருமான். நாங்கள் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் முதலில் விநாயகப் பெருமானை வழிபட்டுத் தொடங்கினால் தான் அந்தக் காரியம் எளிதிலே கைகூடிவிடும்.

விநாயகனை வழிபடாது தொடங்குகின்ற காரியங்கள் இடையிலே தடைப்பட்டுவிடும். அல்லது சிதைந்துவிடும். சிவபெருமான் பிள்ளையாரை வணங்காது முப்புரம் எரிக்கச் சென்ற போது அவருடைய தேரின் அச்சாணி முறிந்து விடுகின்றது. இதைத்தான் அருணகிரிநாதர்

"முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்

அச்சது பொடிசெய்த அதித்ரா".



என்று பாடுகிறார். இதிலே இருந்து விநாயகர் வழிபாட்டின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம். விநாயகர் எளிதிலே அடியவர்களுக்கு அருளக்கூடியவர்.

விநாயகருக்குரிய விரதங்களாக ஆவணி வளர்பிறை சதுர்த்தி, மாதாமாதம் வருகின்ற சங்கடஹர சதுர்த்தி, மற்றும் கார்த்திகை மாதம் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி ஈறாக அனுஸ்டிக்கப்படும் பிள்ளையார் கதை என்பன சிறப்புப் பெறுகின்றன. ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பிள்ளையாருக்குரிய விரதங்களிலே மிகவும் விஷேசமானது. இந்துமக்கள் அனைவராலும் விரும்பி அனுஸ்டிக்கப்படுவது. விநாயகப்பெருமான் உற்பவமான தினம் இந்த வளர்பிறை சதுர்த்தி என்பதினாலே விரதங்களிலே இது சிறப்புப் பெறுகின்றது.

## சதுர்த்தி விரத முறை

அதிகாலையிலே துயிலெழுந்து நீராடி நித்திய கருமங்கள் முடித்துக்கொண்டு பிரார்த்தனை வழிபாடுகள், ஆலய தரிசனம் முதலியனவற்றில் ஈடுபட வேண்டும். மதியம் ஒருபொழுது உண்ணலாம். நல்லெண்ணெய் சேர்க்கக்கூடாது என்பது விதி. இரவு உபவாசம் இது முடியாதவர்கள் பால்பழம் அல்லது பலகாரம் உண்ணலாம்.

விநாயகர் சதுர்த்தி பூசையிலே இன்னுமொரு முக்கிய அம்சம் என்னவெனில் இருபத்தியொரு பத்திரம் இருபத்தியொரு புஸ்பம் இருபத்தியொரு அறுகம்புல் என்பவற்றால் தனித்தனியாக விநாயகரை அர்ச்சிக்கலாம். ஒவ்வொரு நாமம் சொல்லப்படும் போதும் ஒவ்வொரு பத்திரம்,

ஒவ்வொரு புஸ்பம் சமர்ப்பித்து விநாயகருடைய பலவிதமான நாமங்களை ஓங்காரத்துடன் உச்சரித்து விநாயருக்கு வணக்கம் செலுத்தலாம். இதையே அர்ச்சனை என்று சொல்லுகின்றோம்.

பரமேஸ்வரனாகிய தந்தையின் வடிவத்தை நுட்பமாகத் தமக்குள்ளே கொண்டு விளங்கும் பஞ்சமுக அதாவது ஐந்து முகங்களும் பத்துத்திருக்கரங்களிலும் முறையே வலது பக்கத்திலே சூலமும் மழு, வாள், வச்சிரம், அக்கினி என்பவையும் இடது பக்கத்திலே முறையே அபயம், பாசம், மணி, சர்ப்பம், அங்குசம் ஆகியனவும் அமைந்திருக்கும் சிவந்த நிறமுடையவராகவும் சிங்கத்தை வாகனமாகவும் கொண்டவராகவும் அண்டத்திலே உள்ள அனைத்து உயிர்களும் தன்னுள் அடங்கி உள்ளன என்பதைக் காட்டும் பெருவயிறு கொண்டவராகவும் விநாயகர் விளங்குகின்றார்.

பிரார்த்திக்கின்ற அடியவரின் பக்தியில் வசப்படுகின்ற இறைவனுக்கு இத்தனை விதமான மூர்த்தி பேதங்கள் ஏன் என்று நினைக்கத்தோன்றும். நாம் எல்லோரும் பிறப்பு இறப்பு உடையவராக இருப்பது போன்று. இறைவனும் தோற்றம் வடிவம் என்பவற்றைக் கற்பித்து இதன் தத்துவத்தை எம்முடன் இணைத்து ஈடேற தலைப்படுகின்றோம்.

கந்தபுராணத்திலே சிறப்பித்துக் கூறப்படுகின்ற இந்த விரதமானது சூத முனிவராலே பஞ்சபாண்டவருக்கு உபதேசிக்கப்பட்ட பெருமையை உடையது. துரியோதனன் உட்பட கௌரவர்களின் சூழ்ச்சியாலும் கொடுமையாலும் பாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் செய்ய நேர்கின்றது. காட்டிலே மிகுந்த கஸ்டத்தையும் மன வேதனையையும் அடைந்த பாண்டவர்கள் சூத முனிவரைச் சந்திக்கின்றார்கள் தருமன் தமது கஸ்டங்கள் நீங்கி சுகமாக வாழ வழிகேட்கின்றான். அதற்குரிய பரிகாரமாக இந்த விநாயக சதுர்த்தி விரதத்தை உபதேசிக்கின்றார். சூத முனிவர் அதுமட்டுமன்றி இந்த விரதத்தை முறையாக அனுஸ்டித்து பயன்பெற்றவர்களின் வரலாற்றையும் எடுத்துக் கூறுகின்றார்.

தமயந்தி நளனை மீண்டும் வந்தடைந்ததும், இராமன் சீதையை மீட்டதும், கிருஸ்ணன் ஜாம்பாவதியையும், இயமந்த மணியையும் பெற்றுக் கொண்டதும், இந்திரன் அசுர பகையை வென்றதும், பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்ததும் இந்த விரத மகிமையினால் தான் என்றும் கூறி இருக்கின்றார். அதன்படிதான் பாண்டவர்களும் இந்த விரதத்தை முறைப்படி காட்டிலே அனுஸ்டித்ததன் பயனாகவே உரியகாலத்திலே தமது நாட்டையும் ஆட்சி அதிகாரத்தையும் மீண்டும் பெற்றுக் கொண்டனர்.

ஆகவே இந்த விரதத்தை முறைப்படி அனுஸ்டிப்போர் அவர்கள் எண்ணுகின்ற காரிய சித்தியை நிச்சயமாக அடையமுடியும்.

தமிழ்தளரா நாவும் அன்புதளராத உள்ளமும் உடைய ஔவைப்பிராட்டி எந்தக்காரியத்தைச் செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும் விநாயகரை வழிபடுவதை மட்டும் மறக்கமாட்டார்.

"பாலும் தெளிதேனும்
பாகும் பருப்பு மிவை
நாலும் கலந்துனக்கு நான்தரு வேன்
கோலம் செய் துங்கக்கரி முகத்து
தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா"






# விநாயகர் வழிபாட்டு முறைகளும் தத்துவங்களும்

விநாயகர் வழிபாடு மிகவும் தொன்மையானது. சிந்து வெளி நாகரிகத்தில் இவ் வழிபாடு நிலவியதைக் குறிப்பிடுகின்றனர். இருக்கு வேதத்தில் விநாயகர், கணபதி என்ற சொல்லினால் குறிப்பிடப்பட்டுள்ளார். திருமுறைகளிலும் கணபதி என்று சொல்லப்பட்டுள்ளது. கணபதியைப் பரம்பொருளாகக் கொள்ளும் அவரின் தத்துவம், "காணாபத்தியம்" எனப்படும். விநாயகரின் திருவடிவங்களும் திருவுருவங்களில் காணப்படும் ஆயுதமும் அவர் சக்தியுடன் விளங்கும் திருக்கோலங்களும் அவர் எழுந்தருளியிருக்கும் வாகனங்களும் அவரின் திரு நாமங்களும் விநாயகர் வழிபாட்டு முறைகளும் தத்துவப் பொருளை உணர்த்தி நிற்கின்றன.

## விநாயகர் வடிவங்களின் தத்துவ நிலை



" நிறுத்திடுவேன் நினைந்த உருநிமலன் தானே" என்ற சித்தாந்த சைவ தத்துவ அடிப்படையில் அவர் அவ்வப் போது பல்வேறு வடிவங்கள் கொண்டதைச் சமய சாஸ்திர நூல்கள் நன்கு புலப்படுத்துகின்றது. ஸ்ரீ தத்துவ நிதி என்ற சிற்ப நூலில் விநாயகரின் முப்பத்திரண்டு வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. கணபதி ஸ்ருதயம் என்ற நூலில் விநாயகரின் ஐம்பத்தொரு பேதங்களைச் சுட்டி நிற்கின்றது.

விநாயகரின் முப்பத்திரண்டு திருவடிவங் களின் தத்துவ நிலை பற்றி முதலில் நோக்கு வோம்.

### 1) சித்தி விநாயகர்

இவர் மாம்பழம், பூங்கொத்து, கரும்புத் துண்டு, எள்ளுருண்டை, பரசு என்பவற்றைத் தனது ஐந்து கரங்களிலும் தரித்தவரும், பொன் கலந்த பசுமை நிறமுடையவருமாக வீற்றிருக்கின்றார்.



### 2) சக்தி விநாயகர்

இவர் யானை முகத்தையும் எட்டுக் கரங்களையும் கொண்டுள்ளவர். தனது எட்டுக்கரங்களிலும் கிளி, மாதுளம்பழம், தாமரை, மணி, பொன்னால் செய்த நீர்ப்பாத்திரம், அங்குசம், பாசம், கல்பசாத்திரம் ஏந்தியவராய் விளங்குகின்றார். பச்சைத் திருமேனியுடைய தேவியை இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக்கொண்டுள்ள நிலையில் காட்சி தருகின்றார். இவர் அந்திவானம் போன்ற செம்மை நிறமுடையவர்.

### 3) பக்தி விநாயகர்

யானை முகத்தையும் நான்கு திருக்கரங்களையும் உடையவர். தேங்காய், மாம்பழம் வாழைப்பழம், சர்க்கரைப் பாயாசப் பாத்திரம் ஆகியவற்றைத் தனது நாற்கரங்களிலும் ஏந்தியவராகக் காட்சி அளிப்பார். இவர் சரத்கால சந்திரனைப்போல தூய வெண்மையான நிறம் உடையவர்.

### 4) பால விநாயகர்

இவர் குழந்தை வடிவத்தில் உள்ளவர். யானை முகத்தோடும் நான்கு திருக்கரங்களோடும் விளங்குகின்றார். மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் ஆகிய முக்கனிகளையும் கரும்பையும் தனது நான்குதிருக்கரங்களில் ஏந்தியுள்ளார். துதிக்கையில் ஒரு மோதகத்தையும் தாங்கியுள்ளார். இவர் இளம் சூரியனை ஒத்த நிறமுள்ளவர். பால விநாயகர் ஒரே இடத்தில் உட்காராமல் ஓடி விளையாடும் இயல்பினர். ஆரம்ப நிலையில் ஞானத்திற்குச் சலனம் உண்டு என்பதையே இத் திருவடிவம் உணர்த்துகின்றது.

## 5) தருண விநாயகர்

இவர் இளம்பருவத் தோற்றம் உள்ளவர். யானை முகத்தையும் எட்டுத் திருக்கரங்களையும் விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த கொம்பு, நெற்கதிர், கரும்பு என்பவற்றைத் தனது எண் கரங்களிலும் ஏந்தியுள்ளார். இவர் சிவந்த சூரியனின் நிறம் உடையவர்.

## 6) வீர விநாயகர்


இவர் யானை முகத்தையும் பதினாறு திருக்கரங்களையும் உடையவர். கத்தி, வாள், வில், அம்பு, கேடயம், சம்மட்டி, தடி, அங்குசம், பாசம், சூலம், பரசு, குந்தம், வேதாளம், கதை, கொடி, சக்கரம் ஆகிய பதினாறையும் பதினாறு திருக்கரங்களில் ஏந்தி நின்ற கோலத்தில் பதினாறு பேறுகளையும் தருபவராக விளங்குகின்றார். உணவுப் பொருட்கள் இல்லாமல் ஆயுதங்கள் மட்டும் ஏந்தியுள்ள வீரத்திருவுருவம் இது ஒன்றே ஆகும்.

## 7) துவிஜ விநாயகர்

நான்கு திருக்கரங்களிலும் முறையே புத்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். நான்கு யானை முகங்களை உடையவர். மின்னற் கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர். சந்திரன் போல வெண்மையானவர்.

## 8) உச்சிஷ்ட விநாயகர்

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும் நீல நிறத்திருமேனி உடையவருமாக விளங்குபவர். பிறிதொரு நிலையில் இவர் பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராகக் காமபோகிதராகவும் நீலவர்ணம் உடையவராகவும் விளங்குகின்றார். உச்சிஷ்டம் என்பதற்கு ஒருவர் உபயோகித்த பின் ஒதுக்கிய அசுத்தமான பொருள் என்பது கருத்து. எச்சில் என்றும் அர்த்தம் உண்டு. சுத்தமான நிலையை மட்டுமன்றி அசுத்தமான நிலையினையும் கடந்து நிற்கும் நிலையே எமது வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அசுத்தமான பொருட்களும் செடி, கொடிகளுக்கும் பசளையாகி எமக்கு நலன் பயக்கின்றது. இவ்வாறு அழுக்கை அழுக்காகக் கருதக்கூடாது. அவையும் நன்மை செய்யும் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. சிற்றின்பம் தெய்வீகநோக்குடன் அமையும் போது பேரின்பம் பெறப்படும். இது இத் திருவுருவத்தின் நுண்பொருள் ஆகும்.





## 9) விக்ன விநாயகர்

சங்கு, கரும்புவில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களையுடையவராகவும், ஆபரணங்களைநிரம்பத்தரித்தவராகவும்பொன் மேனியுடையவராகவும் விளங்குகின்றார்.

## 10) ஷிப்ர விநாயகர்

தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்னகும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம் பூப்போன்ற அழகிய மேனியர், செந்நிறமானவர்.

## 11) ஹேரம்ப விநாயகர்

அபயம், வரதமாகிய கைகளையுடையவர், பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானைமுகம் ஐந்துடையவர். பசுமை கலந்த கருமை நிறம் உடையவர்.

## 12) இலட்சுமி விநாயகர்

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப் பூவை ஏந்திய இருபெருந்தேவிமார்களோடு திகழுபவர்.



## 13) மஹா விநாயகர்

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர்போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர், பிறை முடியர். மடிமீது எழுந்தருளியிருக்கிற - தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப் பெற்றவர்.

## 14) விஜய விநாயகர்

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

## 15) நிருத்த விநாயகர்

இவரைக் கூத்தாடும் பிள்ளையார் என அழைப்பர். மோதிரங்களணிந்த விரல்களை யுடைய கைகளால் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் என்பவற்றைத் தரித்தவர். பொன்போன்ற நிறமுடைய திருமேனியர்.

## 16) ஊர்த்துவ விநாயகர்

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன் வண்ண வண்ணர். பச்சைநிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.



## 17) ஏகாட்சர விநாயகர்

செந்நிறமானவர். செம்பட்டாடையர். செம்மலர் மாலையர், பிறைமுடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர், மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவை தாங்கிய கரங்களையுடையவர். யானை முகவர் பதுமாசனத்திருப்பவர். பெருச்சாளி வாகனர்.

## 18) வர விநாயகர்

செவ்வண்ணர், யானைமுகவர், முக்கண்ணர், பாசம், அங்குசங்களைத் தரித்தவர். தேன்நிறைந்த கபாலத்தை உடையவர். பிறைமுடியர்.

## 19) திரயாஷ்ர விநாயகர்

அசைகின்ற செவிகளாகிய சாமரையணிந்தவர். பொன்னிறமானவர். நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

## 20) ஷிப்ரபிரசாத விநாயகர்

பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை, விடரம் இவற்றைத் தரித்தவர். திருவாபரணங்களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.



## 21) ஹரித்திரா விநாயகர்

மஞ்சள் நிறமானவர். நான்கு கரங்களை உடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர். பக்தர்களுக்கு அபயமளிப்பவர்.

## 22) ஏகதந்த விநாயகர்

பேழைவயிற்றுடன் நீலமேனியர், கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றையுடையவர்.

## 23) சிருஷ்டி விநாயகர்

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தையுடையவர். சிவந்த திருமேனியர்.

## 24) உத்தண்ட விநாயகர்

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், ரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக்கைகளை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய பச்சைமேனியாளாகிய தேவியால் தழுவப் பெற்றவர். சிவந்த மேனியுடையவர்.

## 25) ரணமோசன விநாயகர்

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்கு போன்ற மேனியர் செந்நிறப்பட்டாடையுடுத்தியவர்.

## 26) துண்டி விநாயகர்

அட்சமாலை, கோடரி, ரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

## 27) துவிமுக விநாயகர்

தந்தம், பாசம், அங்குசம், ரத்ன பாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர். பசுநீலமேனியர் செம்பட்டாடையும் ரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

## 28) மும்முக விநாயகர்

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுதகலசம் இவற்றை உடையவர். பொற்றாமரையாசனத்தின் நடுப்பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம் பூப்போன்ற சிவந்த நிறம் உடையவர்.

## 29) சிங்க விநாயகர்

வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்னகலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிறமான மேனியர், யானைமுகர், சிங்கவாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

## 30) யோக விநாயகர்

யோக நிலையில், யோக பட்டம் தரித்துக் கொண்டு, இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இந்திரநீலம் போன்ற ஆடையை உடுத்திக்கொண்டு, பாசம், அட்சமாலை, யோகதண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.



## 31) துர்க்கா விநாயகர்

சுட்ட பசும்பொன்னிறம், எட்டுக்கை, பெரியமேனி, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் இவைகளை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளில் உடையவர். செந்நிற ஆடையர்.

## 32) சங்கடஹர விநாயகர்


இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பக்கத் தொடையில் சக்தியை உடையவராக விளங்குகின்றார். சக்தி பசியமேனியளாக நீலப்பூவினை ஏந்தியவளாக இருப்பாள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயாசப் பாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீலநிறமான ஆடையணிந்தவர்.



மேலே காட்டப்பட்டுள்ள விநாயகரின் திருவடிவங்களை நோக்கும்போது அவர் பொதுவாக யானைமுகங்கொண்டவராகவும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்ற எண்ணிக்கை உடைய திருமுகங்களை உடையவராகவும், நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினாறு என்ற திருக்கரங்களைக் கொண்டவராகவும்அவற்றில் வெவ்வேறு ஆயுதங்களைத் தரித்துள்ளவராகவும், செம்மை, வெண்மை, மஞ்சள், கருநீலம், நீலம் ஆகிய நிறங்களை உடையவராகவும் தேவி அற்ற திருமேனியராகவும், ஒரு தேவியை உடையவராகவும், இரு தேவியர்களுடன் விளங்குபவராகவும், எலி, சிங்கம் ஆகிய வாகனத்தில் எழுந்தருளியிருப்பவராகவும் விளங்குகின்ற தத்துவ நிலை தெரியவருகிறது. மேலும் விநாயகர் படிமங்கள் நின்ற கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும், ஆடற்கோலத்திலும் அமையும் மெய்மையும் புலப்படுகின்றது. நின்ற கோலத்தில் இயற்றும்போது ஆபங்கம் அல்லது சமபங்கத்தில் விநாயகரின் படிமம் அமைதல் வேண்டும். அமர்ந்த கோலத்தில் அமைக்கும் போது உடலையும் தலையினையும் நேரியதாக அமைத்து வலது காலை ஆசனத்தில் தொடையுடன் சேர்த்து மடக்கி ஊன்றி இடது காலைக் கிடத்தியதாயிருத்தல் வேண்டும். இல்லங்களில் வைத்து வழிபடுவதற்கும், கோயில்களில் பிரதிஷ்டை செய்வதற்கும் அமர்ந்த விநாயகர் கோலப் படிமமே ஏற்றதாகும். உற்சவங்களுக்கு அமர்ந்த கோலம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் நின்ற கோலமுடைய விநாயகரே விஷேடமென்பது தத்துவமாகும்.


## விநாயகரின் திருவுருவத் தத்துவம்

விநாயகர் திருவுருவத்தின் தத்துவ நிலை பரமரகசியமானதாகும். அவரின் தத்துவத்தையும் அவரின் வீரதீரச் செயல்களின் உட்பொருளையும் சிறப்பாகப் புலப்படுத்துவது" விநாயக புராணம்" ஆகும். ஔவையார் பாடியருளிய "விநாயகர் அகவல்" விநாயகர் உருவம் பற்றியும் அவ்வுருவம் சுட்டும் தத்துவப் பொருளையும் விளக்கி நிற்கும் சைவத்தமிழ் இலக்கியமாகும். இவ்விலக்கியத்தில் விநாயகரின் திருவுருவத்தில் சிலம்பு அணிந்து விளங்கும் திருவடிகள். பொன்னால் செய்யப்பட்ட இடைக்கொடி. பெருவயிறு, ஒற்றைக்கொம்பு, சிவந்த குங்குமப் பொட்டு, ஐந்து கரங்கள், அங்குசமும் பாசமும் தரித்த கைகள், நீலமேனி, பெரியவாய், நான்கு திருத்தோள்கள், சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று திருக்கண்கள் கன்னமதம், கைம்மதம், கோசமதம் என்னும் மதங்களைப்



பொழிதலால் உண்டாகும் தழும்புகள் இரண்டு பெரிய காதுகள், பொன்னால் செய்யப்பட்ட கிரீடம், திரண்டு மூன்று வடமாக விளங்கும் பூணுல் பெருச்சாளி வாகனம், என்பன திகழ்வதையும் அவர் சொல்லும், பொருளும் கடந்த தத்துவப் பொருளாக விளங்குவதையும் தன் அடியவர்களுக்கும் தமது தத்துவப் பெருநிலையைக் கொடுத்து ஆட்கொள்ளும் பேரருட் திறத்தையும் தத்துவார்த்த ரீதியாக விளக்குகின்றது. இதனை ஒளவையார் விநாயகர் அகவலில்,

"சீதக் களபச் செந்தா மாரைப்பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக்களிறே
முப்பழம் நுகரும் மூசிக வாகன
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயகர் விரைகழல் சரணே".



என்று குறிப்பிடுவதனால் அறியலாம். திருமூலரும் விநாயகரின் திருவுருவத்தை "ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை" என்று திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். அருணந்தி சிவாச்சாரியரும் விநாயகரின் திருவுருவத் தத்துவத்தை,

"ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தரும் ஒருவாரணத்தின் தாள்கள்".

என்று மொழிவர். விநாயகர் தனது திருக்கையொன்றில் மோதகம் ஏந்தி விளங்குவதை ஆதிசங்கரர் தனது கணேசபஞ்சரத்தின் முதற் பாடலில் "முதாகராத்த மோதகம்" என்று சுட்டுவதால் அறிய முடிகிறது.

விநாயகரின் திருவுருவ உறுப்புக்கள் உணர்த்தும் மறைஞான தத்துவப் பொருளை இங்கு நோக்குவோம்.

## ஐந்து கரங்கள்

விநாயகர் நான்கு கரங்களுடன் தும்பிக்கையையும் சேர்த்து ஐந்து கரங்கள் உடையவராக விளங்குகிறார். பாசம் தரித்துள்ள கரம் படைத்தற்றொழிலைக் குறிக்கின்றது. அங்குசம் ஏந்திய கரம் அவரின் அழித்தற்றொழிலை அறிவிக்கின்றது. உயிர்களுக்கு அபயம் அளித்துக் காக்கும் அபயகரம் அவரின் காத்தற்றொழிலைச் சுட்டி நிற்கின்றது. மோதகம் ஏந்தி நிற்கும் வலது கரம் உயிர்களுக்கு அருள்புரியும் அருளற்றொழிலைப் புலப்படுத்துகின்றது.





தும்பிக்கை எனப்படும் துதிக்கை, உறுஉணர்ச்சி, மணம் அறிதல், உணவை எடுத்தல் என்ற முத்திறங்களை உடையது. அத்துதிக்கை காட்டியும் மறைத்தும் நிற்கும் திரோதானம் ஆகிய மறைப்புத்தொழிலை உணர்த்தி நிற்கின்றது. இங்ஙனம் விநாயகரின் ஐந்து திருக்கரங்களும் படைத்தல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்து தொழிலுக்கும் அவரே அதிபதி என்பதையும், இதனால் அவர் அளவில் ஆற்றல் உடையவராக விளங்குகின்றார் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன.

## யானை முகம்

விநாயகர் யானைமுகம் உடையவராக விளங்குவது, அவரே "ஓம்" என்ற பிரணவப் பொருள் என்பதைச் சுட்டி நிற்கின்றது. அவர் ஓங்கார வடிவினன் என்பது, அவரின் அட்டோத்திர சத நாமங்களில் "ஒங் காராய நம" என்று அவர் துதிக்கப்படுவதனால் உணரலாம். யானைக்கு நினைவு வன்மை, காண்டல், கேட்டல், ஊறு, ஒன்றையும் ஒரு காலத்தும் மறவாமை, மிக்க வலிவு உடைமை, அளப்பரும் சாந்தமுடைமை, இதம் செய்பவர்களுக்கு வசமாய் உதவுவது ஆகிய இவை அருங்குணங்களாக உள்ளன. அதனாலேயே இக்குணங்களெல்லாம் ஒருங்கே அமைந்த விநாயகருக்கு யானைமுகம் அமைந்து விளங்குகின்றது.

## கொம்புகள்

விநாயகரின் திருமுகத்தை நோக்கும் போது ஒரு பக்கம் யானைத் தந்தமாகிய கொம்பு காணப்படுகின்றது. இது ஆண்வடிவின் அடையாளமாகும். மறுபக்கம் யானைத் தந்தமாகிய கொம்பு காணப்படவில்லை. இந்நிலை பெண் வடிவைச் சுட்டி நிற்கின்றது. இந்நிலையானது விநாயகர் ஆண்பாலா பெண்பாலா என்று கேட்பவர்களுக்கு அவர் எப்பாலுங்கடந்த அப்பாலுக்கப்பாலாய் நிற்கும் இயல்பினர் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. ஒடிந்த கொம்பு அபரஞானமாகிய விந்துவைக் குறிக்கும். மற்றைய ஒற்றைக்கொம்பு இறைவனை உணர்வதற்கு வாயிலாகவுள்ள பரஞானத்தைச் சுட்டிநிற்கின்றது. விநாயகரின் திருவுருவத்தில் காணப்படும் கொம்புகளைப் பதிஞானம், பாசஞானம், என்று கூறுதலும் உண்டு, வலது கொம்பாக விளங்கும் ஒடிக்கப்பெற்ற கொம்பு பாசஞானம் ஆகும். பாசஞானம் உணர்வரிய கலைஞானமாகிய சிவஞானத்திற்கு வாயிலாக விளங்கும் தன்மையது ஆகும். அதன் காரணமாகவே அது பாரதம் எழுத உதவிய எழுத்தாணியாக உதவியது. இடதுகொம்பு பதிஞானத்தைச் சுட்டி நிற்கின்றது. அதனாலேயே அது விநாயகரைப் பொருந்திப் பிரிவின்றி இருக்கின்றது.

## மூன்றுகண்கள்

சூரியன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடர்களையும் கண்களைக் கொண்டு அவற்றிற்கு ஒளியைக் கொடுத்து நிற்பவர் விநாயகர் என்ற தத்துவத்தை அவரின் மூன்று கண்கள் சுட்டி நிற்கின்றன. பகலில் சூரியன் என்ற கண்ணாலும், இரவில் சந்திரன் என்ற கண்ணாலும், அக்கினி என்ற கண்ணால் எந்நேரமும் அறியும் ஆற்றல் உடையவர் என்பதே விநாயகரின் மூன்று கண்கள் புலப்படுத்தும் தத்துவமாகும்.



## மும்மதம்

விநாயகர் அறிவு, இச்சை, தொழில் என்ற மூன்றும் உடையவர் என்பது மும்மதம் என்ற சொல்லால் சுட்டப்படும். உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் திருப்பெருகுசிவஞானம் என்ற மூன்று ஞானங்களும் மும்மதங்களாக சுட்டப் பெறுவதில் உண்டு. இதனடிப்படையில் இந்த மூன்று ஞானங்களையும் உணர்த்துகின்றவர் விநாயகர் என்பதே மும்மதம் என்பதன் தத்துவப் பொருளாகும்.

## பெருவயிறு

விநாயகரின் பெரு வயிறானது (பேழை வயிறு) எல்லா உலகங்களும் தம்முள் அடங்கி உள்ளன. என்ற தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது.

## பாம்பாபரணம்

விநாயகர் பாம்பை ஆபரணமாக அணிந்து விளங்குவது அவரின் திருவுருவத்தில் குண்டலினி சக்தியின் தரிசனத்தைக் காட்டி நிற்கின்றது. பாம்பு குண்டலினி சக்தியின் குறியீடாக விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இங்கு " இருத்தியே நாகரூபம்" என்று குறிப்பிடுவது நோக்குதற்குரியது. இருத்தி என்பதற்கு நல்ல செல்வ ம், ஐஸ்வரியம், மேலாந்தன்மை என்பது பொருளாகும். இதனடிப்படையில் நோக் கும் போது இவைகளை உடையவர் விநாயகர் என்பது மட்டுமன்றி அடியவர்களுக்கு அவற்றைத் தருபவர் விநாயகர் என்பதையும் அவர் அணிந்துள்ள பாம்பாபரணம் புலப் படுத்து



கின்றது. விநாயகரின் பூணூலும், அரைநாணும் பாம்பாகவும் விளங்குவது உண்டு.

## பிறை

விநாயகர் பிறை சூடியிருப்பது, அறியாமை அகன்று மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ற உயிர்களை உயர்நிலைக்கு உயர்த்தி உய்விப்பவர் என்பதையும், அவர் ஞானமே வடிவினர் என்பதையும் உணர்த்துகின்றது.

## பூணூல்

விநாயகர் பூணூல் அணிந்துள்ளமை, அவர் பிரம்மஞான உபதேசத்திற்குரிய பிரம்ம ஞானி என்பதையும், அவர் முப்புரிநூல் தரித்துள்ளமையானது பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற முப்பெரும் தத்துவத்தையும் சுட்டி நிற்கின்றது. எங்கும் நிறைந்த அக்கினி வடிவானவர் என்பதையும் சுட்டி நிற்கின்றது.

## மோதகம்

விநாயகர் மோதகம் ஏந்திய திருக்கையானது அனைத்து உலகங்களும், அவ்வுலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் விநாயகரிடத்தில் அடங்கியுள்ளன என்பதை உணர்த்துகின்றது. மோதகம் பூரணப் பொருளின் ஓர் அடையாளமாகும். மேலும் அடியார்கள் பசு ஞானத்தைக் கவளமாக மோதக வடிவில் படைக்கின்றனர் என்பதையும் அவர் அதை உண்டு தமது பேழை வயிற்றைத் திறந்து சிவஞானத்தை அவர்களுக்கு வழங்குகிறார் என்பதையும் உணர்த்தவே கவள உணவாகிய மோதகத்தை அவர் கையில் கொண்டு காட்சி தருகின்றார் என்பது தத்துவமாகும். மேலும் விநாயகரின் திருக்கரத்தில் காணப்படும் மோதகம் அவருக்கு மோதகம் மீதுள்ள விருப்பத்தைப் புலப்படுத்துகிறது. அவருக்கு மோதகம் படைத்து வழிபட்டால் அவ்வடியார்களுக்கு அவர் பேரின்பமாகிய முக்திப்பேற்றினைக் கொடுப்பார் என்பதை உணர்த்தவே ஆதி சங்கரர் தனது கணேச பஞ்சரத்தினத்தில் நுட்பமாக "முதாகராத்த மோதகம் ஸதாவி முத்தி சாதகம்" என்று அவரைப் பாடியுள்ளார் எனலாம்.



## திருத்தாள்கள்

விநாயகரின் திருவுருவமும் திருத்தாள்களும் ஞானத்தின் அடையாளங்களாகும். விநாயகர் ஞானக் குழந்தையாக விளங்குவதை "ஞானக்கொழுந்து" என்ற திருமந்திரக் குறிப்பால் அறிய முடிகின்றது. சிவபெருமானை ஞானத்திருவுருவாகக் காட்டும் குமரகுருபர அடிகள் அவரின் திருவடிகளும் ஞானம் என்பதைச் சுட்ட "ஞானம் திருவடி" என்றே குறிப்பிடுகின்றார். தத்துவ நோக்கில் உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களை இயக்கி அருமையின்பத்தை அளிப்பது ஞானமாகும். இந்த ஞானம் ஏற்பட்டதும் உயிர்கள் விளக்கம் பெறுகின்றன என்பது சைவ தத்துவ முடிவாகும். இவ் வகையில் உயிர்களை உய்வித்து அவ்வுயிர்களுக்குப் பேரின்பப் பேற்றை அளிக்கும் சித்தாந்த சைவ தத்துவத்தைச்

## விநாயகர் ஏந்தியுள்ள ஆயுதங்களின் தத்துவம்

விநாயகர் பிரணவ தத்துவ வடிவமாவார். அவர் தமது திருக்கரங்களில் பல வகையான ஆயுதங்களை ஏந்தியவராக விளங்குகின்றார். அவ்வாயுதங்கள் நல்லவர்களைக் காப்பாற்றவும், தீயவர்களை அழிக்கவும், தம்மை வழிபடுகின்ற அடியவர்களின் இடையூறுகளைப் போக்கவும் பயன்பட்டதை விநாயகரின் தெய்வீக வரலாறு பற்றிய கதைகள் நன்கு புலப்படுத்துகின்றன.

தனது அடியவர்களுக்கு ஆன்மீக அழகுப் பொருட்களாகவும், அபயம் அளிக்கும் கருவிகளாகவும் காட்சியளிக்கும் அவ்வாயுதங்கள் தீயவர்களுக்கு அச்சத்தைக் கொடுப்பனவாகவும் விளங்குகின்றன.

விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்களைக் கூர்ந்து நோக்கினால், அவர் வாழ்வில் வெற்றியீட்டித் தரும் வீரம்மிகு கடவுளாக விளங்குவது புலப்படுகின்றது. விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தி நிற்கும் ஆயுதங்கள் அவர் ஒரு வெற்றித் தெய்வம் என்ற விநாயக தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தி நிற்கும் ஆயுதங்கள் சுட்டும் தத்துவப்பொருளை ஈண்டு நோக்குவோம்.

### பாசம்

இது விநாயகருக்குரிய சிறப்பான ஒரு போர்க் கருவியாகும். கயிறு என்றும் இதனை வழங்குவர். தீயவர்களின் கை கால்களைக் கட்ட இது பயன்படுகின்றது. இது மூன்று வடமாகவுள்ள கயிற்றை வளைத்துப் பிடித்த அமைப்பாகும். எளிதில் அவிழக்கூடிய முடிச்சாக முறுக்கி இதனை அமைப்பர். சுருக்கு இடாமல் வளையமாகவும் இது அமைதல் உண்டு. விநாயகருக்குச் சிறப்பான ஆயுதமாக அமையும் நாகமே, பாசமாக அமைவதும் உண்டு. இதனை "நாகபாசம்" என்பர். இது நான்கு வகைப்படும். யானையைப் பாசத்தால் கட்டுவதுபோல் ஆன்மாக்களின் ஆணவமலத்தைக் கட்டி, அதனை வலிகுன்றச் செய்ய உதவும் கருவி பாசம் ஆகும். மூன்று வடமாகவுள்ள பாசக் கயிறு "பாசத் திரவியம்" என்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைக் குறிக்கும். விநாயகர் உயிர்களுக்குப் போகங்களைக் கொடுத்து, அதனோடு கட்டுண்டிருக்கச் செய்யும் கருத்தைப் பாசம் என்ற கயிறு சுட்டுகின்றது. பாசமாகிய பற்று அறுத்தலையும் பாசம் என்பது புலப்படுத்துகின்றது.



### அங்குசம்

விநாயகர் தாங்கியிருக்கும் சிறந்த கருவிகளில் அங்குசமும் ஒன்றாகும். இது யானையை அடக்கப் பயன்படுகிறது. யானைப்பாகன் இதனை யானையின் காதிலே மாட்டித்



தொங்கவிட்டிருப்பான். உயிர்களைப் பாதிப்படையச் செய்யும் ஆணவமலத்தை பாசக்கயிற்றால் கட்டி அங்குசத்தில் அதனை அடக்கி மறைத்தல் என்னும் அருளைப் புரிபவர் விநாயகர் என்பதை அங்குசம் என்ற கருவி உணர்த்துகின்றது. இது வயப்படாத பொருளை வயப்படுத்தும் ஆயுதமாகும். இது உயிர்களின் சித்த மலமாகிய ஆவணத்தை அடக்கி இறுதியில் உயிர்களைத் தன்வயப்படுத்துதலை உணர்த்தும் தத்துவத்தைச் சுட்டு கின்றது.

### தந்தம்

இது ஒடிந்த யானைக் கொம்பு ஆகும். வேதவியாசர் மகாபாரதத்தை எடுத்துரைத்த போது, அந்த இதிகாசம் அழியாது அதனை அனைவரும் படித்துப் பயன் பெறும் பொருட்டு விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அதையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதி வைத்தார். அந்த எழுத்தாணியே அவரது திருக்கரத்தில் விளங்கும் ஒடிந்த ஒற்றைக் கொம்பாகிய தந்தம் என்பதன் விளக்கம் ஆகும். இக் கொம்பானது "எழுத்தறிவித்தவன் விநாயகரே" என்ற விநாயக கல்வித் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது.



மேலும் விநாயகர் தந்தத்தைக் கையில் வைத்திருப்பது பிறிதொரு தத்துவ விளக்கத்தையும் தருகின்றது. ஓர் அரசன் தனக்கு எந்த ஆயுதத்தினாலும் மரணம் நேரக்கூடாது என்ற வரத்தைப் பெற்றிருந்தான். வரம்பெற்ற காரணத்தினால் நல்லவர்களுக்கெல்லாம் சொல்லொண்ணாத் துயர் விளைவித்தான். ஆயுதப் பிரயோகம் இன்றி அக்கொடியை அசுரனைக் கொன்ற தத்துவப் பொருளை நினைவுபடுத்துவதாகவும், அவர் திருக்கரத்தில் திகழும் ஒடிந்த கொம்பாகிய தந்தம் விளங்குகின்றது.

### வேதாளம்

அச்சமும் அருவெறுப்பும் தரத்தக்க தலை நாரில்லாத பூதவடிவாக இது விளங்குகிறது. பகைவர்களை விழுங்கச்செய்ய இது ஏவப்படும். வீர விநாயகரின் ஒரு கரத்தில் இது இருக்கிறது.

### சக்தி

இதனை வேலாயுதம் என்பர். இது முருகனுக்கும் சிறப்பாக அமைந்த ஓர் ஆயுதம் ஆகும். ஆறு கூரிய பகுதிகளை உடையது. தகட்டு வடிவானது விநாயகர் வீர கணபதியாக விளங்கும் போது இதனைத் தாங்கியிருப்பார். இது எதிரியை எறிந்து அழிக்க உதவும் ஒரு போர்க்கருவியாகும். இதனை நடுவில் பிடித்து எறியலாம். இரு பக்கமுங் குத்தும் இயல்பு இவ்வாயுதத்திற்கு உண்டு. இவ்வாயுதம் ,மூன்று சாய் சதுரங்களின் சோடிகள் ஒன்றோடொன்று நெருங்கியிருக்குமாறும் வரிசையாகவும் அமையப் பெற்று அப்பகுதி

ஒரு தண்டத்தின் நுனியில் பொருத்தப்பட்ட நிலையிலும் அமையலாம். இதன் மேற்பகுதி இச்சாசக்தியையும், நடுப்பகுதி ஞானசக்தியையும், கீழ்ப்பகுதி கிரியா சக்தியையும் குறிக்கும். இதனடிப்படையில் நோக்கும் போது இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்று சக்திகளும் விநாயகருள் அடங்கும் என்பது இவ்வாயுதத்தின் தத்துவப் பொருளாகும்.

### அம்பு

இது வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப்பெறுங் கருவி, நுனி கூரிய முள்போன்றது. நுனி மட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். அதனது வால்ப் பக்கத்தில் கழுகின் இறகுகளையும், மற்றப் பறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும் பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே இறகு கட்டப்படுகின்றது.

### வில்

இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில், சிலையென்னும் மரம் முதலான வளையக்கூடிய நார் மரத்தால் செய்யப் பெறுவது. இந்த வில்லில் தோல் அல்லது நார்க் கயிற்றானி என்ற நாண் கட்டப் பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுக்கக் கட்டி அதன் நடுவில் அம்பை வைத்துவிடுவது வழக்கம். எவ்வளவுக்கெவ்வளவு வில்லின் வலிமையும் நாணின் உறுதியும், இழுத்து விடுபவனின் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அம்பின் வேகமும், தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தேய்த்து வைத்தலும் வழக்கம். அம்பின் நுனி பிறைமதிபோலக் கவர்பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்று பெயர்.



### சக்கரம்

இது விநாயகருக்கும் விஷ்ணுவுக்கும் உரிய சிறப்பான ஆயுதம் ஆகும். விஷ்ணுவின் சக்கரத்திற்குச் "சுதர்சனம்" என்று பெயர். இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. அதில் மற்றது வளையம் போன்றது. இது வட்ட வடிவமாகவும், நான்கு திசைகளில் தீச்சுடர்களைக் கொண்டதாகவும் விளங்கும் சக்கரம் தர்மத்தின் அடையாளம் ஆகும்.



### கத்தி

இது இன்று அறவே மறந்து போன ஒரு கருவி. தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி. இதுவும் பகைவரை அடிக்கப் பயன்படும். தலைப் பக்கம் ஒரு மண்டை ஓடு போலவும் கம்பி முழங்கால் எலும்பாகவுங்கூட அமைந்திருப்பதுண்டு. இதனைக் குத்துக்கத்தியாகிய பிச்சுவா என்பாரும் உளர்.

### கேடயம்

இது கத்தி வெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. பலகையானாலும், வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர்யானை, காண்டா மிருகம் இவற்றின் தோலாலும்

செய்யப்பெறும். சதுரம், நீள்சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பலவடிவங்களிற் செய்யப்பெறும். இன்னல், இடையூறுகள் என்பவற்றைத் தடுத்து நிறுத்தும் கேடயம் என்ற கருவி தர்மத்தின் ஓர் அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது.

### சம்மட்டி

இது இரும்பாலியன்ற கனத்த தலைப்பகுதியை உடையது. இதன் நடுவில் தொளையிடப் பெற்றிருக்கும். இதில் கைபிடிக்கும் சிறுகழியைக் கோத்திருப்பார்கள். இதுவும் உடையவன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப்பெறும்.

### கதை

குண்டாந்தடி, இதில் பலவகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொருக்கப் பயன்படுவது. கையைவிட்டு அகலாதபடி, காவலாக இருந்து, உடையவனைப் பாதுகாப்பது.



### நாகபாசம்

பாசவகைகளுள் "நாகபாசம்" என்பதும் ஒன்றாகும்.

### சூலம்

இது மூன்று நுனிகளையுடையது. விநாயகர் தரித்திருக்கும் இவ்வாயுதம்



சிவபெருமானுக்கும் சிறப்பாக உரியது. கரைவரையிலும் எஃகு இரும்பாற் செய்யப் பெற்றது. நீளமான மரக்கம்பிற் கோக்கப் பெற்றிருக்கும். இதனை மூவிலை, நெடுவேல், முத்தலைவேல் என்றும் கூறுவர். இதன் மூன்று நுனிகளும் ஆரணி, ஜெனனி, ரோதயித்ரி என்ற முச் சக்திகளைக் குறிக்கும். ஜெனனி ஆக்கலையும், ஆரணி அழித்தலையும், ரோதயித்ரி காத்தலையும் குறிக்கும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மும்மூர்த்திகளையும், சாத்துவிகம், ராஜசம், தாமசம் என்ற முக்குணங்களையும் சுட்டி உணர்த்துவதாகவும் இவ்வாயுதம் திகழ்கின்றது.

### குந்தாலி

இது, வன்மையான நிலப்பாறைகளை உடைக்கப் பயன்பெறும். தலைக்கனத் துக்குரிய நுனியோடு இருக்கும். இரும்பானியன்ற கருவி இது. இதில் பல வகைகள் உண்டு.

### மழு

இது மரங்களை வெட்டப் பயன்பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகின்றது. மிகக் கூர்மையானது "வாய்ச்சி" என்னும் மரஞ்செதுக்கும் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பமான கருவி. விநாயகரின் சத்தியம் என்ற உயர் குணத்தைச் சுட்டும் கருவி மழு ஆகும்.

## கொடி

கொடி வெற்றிக்கு ஓர் அடையாளம் ஆகும். துணியாலியன்றது, அடையாளம் எழுதப் பெற்றது. இதனையும் விநாயகப் பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கின்றார்.



## தண்டம்

இது நீளமான கைத்தடி ஆகும். மரத்தாலானது, மரணத்தையும் தண்டனையையும் இது சுட்டிக்காட்டுகின்றது.

## கமண்டலம்

நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் உண்டானது. முனிவர்கள், அந்தணர்கள் தங்கள் நாட்கடன்களைக் கழிப்பதற்காக அதனை வைத்திருப்பார்கள். இது ஆயுதமாக இல்லாவிட்டாலும், திருவுரு நிலையை அறிந்து கொள்ள உதவும் கருவி ஆகும். பரந்த ஞானம் தம்முள் நிறைந்தவர் என்பதைக் கமண்டலம் சுட்டி நிற்கின்றது.

## பரசு

இது சற்றேறக்குறைய மழுப்போன்ற கருவி ஆகும். ஆனாலும் மழுவின் வாய் சதுரமாக இருக்கும். இதன் வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்கப்பெற்றுப் பயன்படுத்தப்பெறும் கருவியாகும். விநாயகரின் சத்திய குணத்திற்கு இது ஓர் அடையாளமாகும்.



## கரும்புவில்

கரும்பால் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி. யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும், காமேஸ்வரியாகிய காமாட்சியும் இதனைத் தாங்கியிருப்பர்.

## சங்கு

இது விநாயகருக்கு மட்டுமன்றி விஷ்ணுவுக்கும் சிறந்த ஆயுதம் ஆகும். இது வெற்றியை அளிக்கும் கருவியாகும். பகைவர்கள் இதன் ஒலி கேட்டதுமே ஒடுங்குவர். இது ஓர் அச்சக் கருவியாகும். இதிலும் பல வடிவங்கள் உள்ளன. சங்கு வலம் சுழித்ததாகவோ இடம் சுழித்ததாகவோ இருக்கலாம். சங்கிலிருந்து விநாயகரின் வடிவத்தைச் சுட்டும் ஓங்கார ஒலி எழுப்புவதால் இது ஆக்கல் தொழிலைக் குறிக்கும் தத்துவச் சின்னத்தின் குறியீடு எனலாம்.

## புஷ்பபாணம்

இது தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களால் இயன்ற பாணம் ஆகும். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். இதனைப் போக



நிலையில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு. காமத்தை எரிப்பவர் என்பது புஷ்ப பாணத்தின் நுண்பொருள் ஆகும்.

## கோடரி

மரம் பிளக்கப் பயன்படும் கருவியைப் போன்று பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படும். இக்கருவி இரும்பால் ஆனது.

## அட்சமாலை

இது உருத்திரா அட்சமாலை ஆகும். இது தனித்தனியே ஒரு மாலையாகத் திருவுருவங்களில் தொங்குவது உண்டு. மிகப் பழமையான திருவுருவங்களில் இது ஓராயுதம் போல் இருப்பதைக் காணலாம். அட்சமாலை கால தத்துவத்தின் ஓர் அடையாளம் ஆகும்.

## சாமரம்

இது கவரிமானின் வால் மயிரால் ஆனது ஆகும். இது ஓர் ஆயுதம் அன்று. இருந்த போதிலும் விநாயகருடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுத வரிசையில் இதுவும் இடம் பெற்றிருக்கின்றது.

## கட்டுவாங்கம்



இது ஓர் நீளமான கத்தியாகும். போரில் பகைவர்களை வெட்டப் பயன்படுகின்றது. இதில் ஒரு முனையுடையதும் இருமுனையுடையதும் என இரு வகையுண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனியை உடையதாகவும் இது விளங்கும். இது உயிர்களின் மீது படிந்துள்ள பாசங்களை அறுக்கும் கருத்தைச் சுட்டி நிற்கிறது.

## தீ அகல்

இது ஓர் தீப்பிழம்பு ஆகும். தீ அகலாகிய மழுவின் வடிவும் இதைப் போன்றே இருக்கும். இது விநாயகரின் அழிக்கும் ஆற்றலைக் குறிக்கும் உயிர்கள் மீது படிந்துள்ள பாசங்களைச் சுட்டு உயிர்களைத் தூய்மைப்படுத்துகின்ற இறைவனின் ஆற்றலைக் குறிக்கும் ஓர் அடையாளமாகும்.

## வீணை

இது ஓர் இசைக் கருவி ஆகும். போர்க் காலங்களில் தளர்ச்சியடைந்திருக்கும் படைவீரர்களுக்கு உணர்ச்சி ஊட்ட இக்கருவி பயன்படும். விநாயகர் தரித்திருக்கும் மேற் கூறப்பட்டுள்ள ஆயுதங்கள் சிவன், அம்பிகை, விஷ்ணு, முருகன் ஆகிய கடவுளர்களின் திருக்கரங்களிலும் விளங்கக் காணலாம். சிவனின் திருக்கரத்தில் திகழும் மழு, பரசு, சூலம் என்பன : அம்பிகை கைகளில் ஏந்தியுள்ள அங்குசம், பாசம், அட்சமாலை, கரும்புவில், கத்தி, வாள், வீணை ஆகியவை: விஸ்ணுவின் கரங்களில் விளங்கும் சங்கு, சக்கரம் என்பவை. முருகன் திருக்கரங்களில் தரித்துள்ள சக்தி வேல், வில், அம்பு, தண்டம் போன்றவை விநாயகரின் திருக்கரங்களிலும் திகழ்வதைக் கண்டு மகிழ முடிகின்றது. "கடவுள் ஒருவரே அவ்வப்போது பற்பல வடிவங்கள் எடுக்கிறார்" என்ற ஓர் இறை

தத்துவத்தை, கடவுளர் எல்லோரிடத்திலும் ஒரே விதமாகக் காணப்படும் சிறப்பு மிகு ஆயுதங்கள் நுட்பமாகப் புலப் படுத்துகின்றன எனலாம்.



## விநாயகர் வடிவங்களில் சக்தி தத்துவம்

விநாயகர் வடிவங்களில் சக்தி இடம்பெற்றிருப்பதும் விநாயகரே சில இடங்களில் பெண்வடிவத்தில் காட்சி தருவதும் விநாயகரின் தத்துவச்சிறப்பை நன்கு புலப்படுத்துவதாகவுள்ளது.

தமிழகத்திலும் ஈழத்திலும் விநாயகரைப் பெரும்பாலும் பிரம்மச்சாரியராகவே வழிபடுவது பிரசித்தமாக வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது. "பவன் பிரமச்சாரி" என்ற சைவ சித்தாந்த தத்துவம் இங்கு நினைவு கூரத்தக்கதாகவுள்ளது. தமிழகம், ஈழம் போன்ற இடங்களில் விநாயகரைப் பிரமச்சாரியின் கோலத்தில் வழிபடுவதே சிறப்புற்றிருப்பினும், தமிழகத்தில் விநாயகர், வல்லபை என்ற சக்தியுடன் கூடிய நிலையிலும் "சித்தி, புத்தி" என்ற இரு சக்திகளுடன் சேர்ந்த கோலத்திலும் தொழப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வட இந்தியாவில் விநாயகர் பெரும்பாலும் சக்தியுடன் சேர்ந்த நிலையிலேயே விளங்குகின்றார். இவ்வடிவத்தை அவர்கள் "லட்சுமி விநாயகர்" என அழைக்கின்றனர்.

தமிழகத்திலும் ஈழத்திலும் " வல்லபை" என்ற சக்தியுடன் விளங்கும் விநாயகரை "வல்லபவிநாயகர்" அல்லது "வல்லபகணபதி" என்று வழங்குகின்றனர். வல்லபை என்ற சத்தியை விநாயகர் தனது இடது பக்க மடியில் அணைத்து வைத்திருக்கும் அமைப்பில் வல்லபை விநாயகர் படிமம் காணப்படுகின்றது. சிவாகமங்கள் விநாயகரின் சத்தியாக வல்லபையைக் குறிப்பிடுகின்றது. வல்லபம் என்பதற்கு வல்லமை என்பது பொருளாகும். வல்லமை என்றால் ஆற்றல் என்பது கருத்தாகும். எனவே ஆற்றலின் ஓர் அடையாளத்தைச் சுட்டி நிற்பதாக விநாயகருடன் வல்லபை என்ற சக்தி விளங்குகின்றாள் எனலாம்.

உமாதேவியின் அம்சமான இவள், யமுனை ஆற்றின் அருகேயுள்ள ஒரு தடாகத்தில் ஒரு தாமரை மலரில் பெண்வடிவமாக அவதரித்து மரீசி முனிவரால் வளர்க்கப்பட்ட தெய்வீக சத்தியாவாள்.

விநாயகர் சித்தி, புத்தி என்ற இரு சக்திகளுடனும் "சித்தி விநாயகராக" விளங்குகின்றார். சித்தியும், புத்தியும் பிரமதேவனது புத்திரிகளாவர். விநாயகர் சித்தி, புத்தி எனும் இரண்டு சத்திகளுடன் விளங்குவது பெரும் தத்துவத்தைச் சுட்டி நிற்கிறது. சித்திதேவி கிரியாசக்தியின் வடிவமாவார். புத்திதேவி இச்சா சக்தியின் அம்சமாவார். விநாயகர் பிரம்ப ஞான வடிவமுடையவர். இச்சையும், கிரியையும் இருந்தால் தான் ஞானத்தின் மூலம் ஒரு காரியத்தைச் செய்ய முடியும் என்ற தத்துவத்தைச் சுட்டவே விநாயகர் சித்தி, புத்தி எனும்

இரு சக்திகளுடன் விளங்குகிறார். இந்நிலையில் இவர் இல்லற ஞானியாகத் திகழ்கின்றார் எனலாம். பிரபஞ்சம் ஒடுங்கும் போது இச்சை, கிரியை எனும் இரு சத்திகளை விநாயகர் தன்னுள்ளே ஒடுக்கிக் கொண்டு, தாம் ஞானவடிவமாகத் திகழ்கின்றார். அப்போதே விநாயகர் பிரம்மச்சாரியாக விளங்குகின்றார்.

உலகில் அவ்வப்போது அஞ்ஞானத்தின் உருவமாகச் சில அரக்கர்கள் தோன்றி தர்மத்தை அழித்து அதர்மத்தை மேலோங்கச் செய்து உலகில் பெரும் கொடுமைகளைச் செய்ய முற்படும்போது விநாயகர் சித்தி, புத்தி எனும் தேவிகளின் பிரம்மச்சாரிய வடிவமாக தாம் மட்டுமே ஞான வடிவமாக நின்று, அதர்மம் செய்பவர்களை அழிக்கின்றார் என்று அவர் பற்றிய தெய்வீக வரலாறுகள் அமைந்து விளங்குகின்றன. அவருடன் பெண் அம்சமான சத்திகள் இருக்குமாயின் சத்தியின் இயல்பாக கருணை எண்ணமே மேலோங்கி நிற்கும். இதனால் அதர்மத்தை அழிக்க முடியாத நிலை ஏற்படும். தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பாற்ற வேண்டிய வேளைகளில் கருணையின் அடையாளமாக சக்திகளின்றி தாம் தனியாகவே பிரம்மச்சாரியாக அவர் விளங்குகின்றார். துட்ட நிக்ரஹ சிட்ட பரிபாலனம் செய்ய வந்ததே பிரம்மச்சாரிய விநாயகர் ஆவார். மேலும் விநாயகர் திருமாலின் புத்திரிகளான மோதை, பிரமோதை, சுமநசை, சுந்தரி, மநோரமை, மங்கலை, கேசினி, காந்நை, சாருஹாலை, சுமத்தியமை, நந்தினி, சாமதை என்ற பன்னிருவரை மணந்தார் என்றும் சமய நூல்கள் குறிப்பிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சக்தியுடன் விளங்கும் விநாயகர் படிமங்களாக சக்தி விநாயகர், லட்சுமி விநாயகர், மஹாவிநாயகர், ஊர்த்துவ விநாயகர், உத்தண்ட விநாயகர், ஸ்ரீசங்கட ஹரவிநாயகர், வல்லப விநாயகர், சர்ப்பா பரண விநாயகர் என்போர் காட்சிதருவது கண்டு களித்தற்குரியதாகும்.



மஹாவிநாயகர், சித்திவிநாயகர், சக்திவிநாயகர், மோட்ச விநாயகர், வித்யா விநாயகர் என்ற ஐந்து விநாயகர் வடிவங்களின் அரிய இணைப்பாகக் காட்சி தரும் "பஞ்சமுக விநாயகர்" வடிவம் விநாயகரின் சக்தி தத்துவத்தை மேலும் பெருமைப்படுத்தி நிற்கின்றது.



இவ்வாறு விநாயகர் சக்தியுடன் சேர்ந்த நிலையிலும் சக்தியுடன் சேராத நிலையிலும், சக்தியாகவே விளங்குகின்ற நிலையிலும் காணப்படும் விநாயக தத்துவநிலை வியக்கத்தக்கதாகவுள்ளது.

## விநாயகரின் வாகனத்தத்துவம்

விநாயகர் நான்கு யுகங்களிலும் நான்கு வாகனங்களில் விளங்குகின்றார். அவர் கிருதயுகத்தில் சிங்க வாகனத்திலும், திரேத யுகத்தில் மயில் வாகனத்திலும், துவாபர யுகத்தில் எலிவாகனத்திலும், கலியுகத்தில் குதிரை வாகனத்திலும் விளங்குவதாகச் சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. நந்தி,

பூதம், கருடன் என்பனவும் விநாயகருக்கு வாகனங்களாக விளங்கக் காணலாம். விநாயகரின் சிறப்பான வாகனம் மூஷிகம் ஆகும். இன்றைய கால கட்டத்தில் விநாயகர் மூஷிக வாகனத்தில் விளங்குவதையே பெரிதும் காணமுடிகின்றது.

## மூஷிகவாகனம்



விநாயகருக்கு மூஷிக வாகனன் என்று ஒரு பெயர் உண்டு. மூஷிகம் என்பது எலி, பெருச்சாளி என்பவற்றைக் குறிக்கும் வடமொழிச்சொல்லாகும். பென்னம் பெரிய விநாயகர் சின்னஞ் சிறிய மூஷிகத்தை (எலி, பெருச்சாளி) வாகனமாகக் கொண்டது. பெருந்தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. நல்லவர்களைக் காப்பாற்றுதல், தீயவர்களை அழித்தல் என்ற இறை தத்துவத்தைச் சுட்டி நிற்பதே விநாயகர் எழுந்தருளியிருக்கும் மூஷிக வாகனமாகும்.

நல்லவர்களாகிய தேவர்களின் துயர் களைந்து, அவர்களைக் காப்பாற்றும் பொருட்டாகவே அசுரனாக விளங்கிய கஜமுகாசுரனை விநாயகர் அழித்தார். அசுரனாகிய கஜமுகாசுரனை அழித்தபோது அவன் பெருச்சாளி வடிவம் (எலி) பெற்று விநாயகருக்கு வாகனமாயினன் என்பது விநாயகரின் தெய்வீக வரலாற்றுக் கதைகளால் அறியப்படும் செய்தியாகும். இக்கதை ஓர் அரிய சித்தாந்த சைவதத்துவத்தைப் புலப்படுத்துகின்றது.

ஆணவ மலத்தின் அடையாளமாக விளங்கிய கஜமுகாசூரன், அம்மலம் வலிகுன்றிய நிலையில் சின்னஞ்சிறிய பெருச்சாளியாக விளங்க அதனை விநாயகர் வாகனமாகக் கொண்டார். என்பது தத்துவமாகும். இவ் வகையில் நோக்கும் போது மூஷிகவாகனம் ஆணவமலத்தின் ஒரு குறியீடாக விளங்கும் தத்துவம் என்பது நன்கு புலப்படுகின்றது.

பாற்கடலில் தோன்றிய ஆணவமாகிய பெரும் விஷமானது சிவபெருமானின் திருமிடற்றிலடங்கி முதல்கெடாது வலிகெட்டு நிற்பதைச்சுட்டுவது போலவே ஆணவமல வடிவமாகிய கஜமுகாசுரனும் முதல் கெடாது வலிகெட்டு மூஷிக வடிவில்(எலி) விநாயகரின் வாகனமாக விளங்குவது புலப்படுகின்றது.

## சிம்ம வாகனம்

விநாயகர் ஐந்து முகங்களுடன் விளங்கும் நிலையில் அவர் ஏரம்ப விநாயகர் என வழங்கப்படுகின்றார். ஏரம்ப விநாயகரின் வாகனம் சிம்ம வாகனம் ஆகும். விநாயகரின் திருநாமங்களுள் சிம்மவாகஹனாயக என்பது ஒன்றாகும். அம்பிகை காளியாக விளங்கும் நிலையில் அவள் சிம்மத்தை வாகனமாகக் கொண்டு விளங்குவாள். இதனால் அவளுக்குச் "சிம்மவாஹினி" என்ற பெயர் உண்டு. மிகக்கொடிய சிங்கத்தை அடக்கி ஆள்வதை சிம்ம வாகனம் காட்டுகின்றது. மிகக் கொடிய ஆவண மலம் அழியாது அடக்கப்பட்டிருத்தலையே விநாயகரின் சிம்ம வாகனம் சுட்டி நிற்கின்றது.

### யானை வாகனம்

யானை முகக் கடவுளாகிய விநாயகருக்கு யானை வாகனம் அமைந்து விளங்குவது பொருத்தமாக உள்ளது. திருச்செந்தூர் ஆவுடையார் குளக்கரையிலுள்ள அரசாள்வார் விநாயகர் முன்பும், ஸ்ரீவில்லி புத்தூர் (காமராசர்) மடவார் வளாகம் வைத்திய நாதசுவாமி கோயில் நுழைவாயிலில் உள்ள கல்யாண விநாயகர் முன்பும் யானை வாகனம் காணப்படுகின்றது. யானை ஆணவ மலத்தின் ஓர் அடையாளமாகும். அதனை அடக்குவதைக் காட்டுவதே யானை வாகன விநாயகர் சுட்டும் தத்துவமாகும்.

### மயில் வாகனம்

திருச்சியிலுள்ள திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி கோயிலில் காணப்படும் ஓவியத்தில், விநாயகர் மயில் வாகனத்தில் உள்ளார். பாண்டிச்சேரி மலைக்குகை விநாயகர் கோயிற்சுவரிலுள்ள கதைச் சிற்பத்திலும் விநாயகர் மயில் மீது காட்சி தருகின்றார். அருப்புக்கோட்டை தாதன்குள விநாயகர் கோயிலிலும் மயில் வாகனம் உள்ளது. மயிலும் ஆணவ மலத்தின் குறியீடாகும். மயில் வாகனம் இதையே சுட்டி நிற்கின்றது.

### குதிரை வாகனம்

குதிரையானது மூன்று விதமான கோலங்களில் வாகனமாகக் கொள்ளப்படும். நின்ற கோலம், பாய்ந்து நிற்கும் கோலம், நாட்டியக்கோலம் ஆகியவை அம்மூன்று கோலங்களாகும். குதிரை யோகத்தின் ஓர் அடையாளம் ஆகும். குதிரைகள் திசைகளையும் புலன்களையும் குறிக்கின்றன. கடலூர் வட்டம் சென்னப்பநாயக்கன் பாளையம், மலையாண்டவர் விநாயகர் கோயிலில் குதிரை வாகனம் அமைந்துள்ளது. கோயம்புத்தூர் குருபதேசிக கவுண்டர் விநாயகர் கோயிலிலும் குதிரை வாகனம் உள்ளது.



### நந்தி வாகனம்

நந்தி தர்மத்தின் அடையாளம் ஆகும். சுசீந்திரம், வில்லி புத்தூர் மடவார்வளாகம், இராசபாளையம் முதலிய இடங்களில் உள்ள விநாயகர் கோயில்களில் நந்திவாகனம் உண்டு.



### பூதவாகனம்

மதுரை திருப்பரங்குன்றம் பழைய சொக்கநாதர் கோயில் முன் மண்டபத்தூணில் போருக்குப் புறப்படும் நிலையில் விளங்கும் சிற்பம் ஒன்றைக் காணலாம்.

### கருட வாகனம்

விநாயகர் விஷ்ணுவின் அம்சமாகவும் விளங்குவதால் அவருக்கு முன் கருடனை நிறுவலாம் என்று விஸ்வக்சேன சம்ஹிதை குறிப்பிடுகின்றது.

## விநாயகரின் நாம தத்துவம்

விநாயகருக்குப் பல நாமங்கள் உள்ளன. அவற்றுள் அவரின் அருட் பேராயிரத்தைக் கூறும் "ஸ்ரீ மஹா கணபதி ஸஹஸ்ரநாமாவளி" யும் முந்நூறு நாமங்கள் கொண்ட "த்ரிசதீ நாமவாளி" யும் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் வரும் திருநாமங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தத்துவப் பொருளைப் புலப்படுத்துகின்றன. விநாயகரின் முக்கிய திருநாமங்கள் சுட்டும் தத்துவப் பொருள் பின்வருமாறு அமைகின்றது.

## விநாயகர்

விநாயகர் என்ற பெயர் பல தத்துவப் பொருள்களைத் தந்து நிற்கின்றது. விநாயகர் என்பதற்கு தமக்கு மேலொரு நாயகரும் (தலைவரும்) இல்லாதவர் என்பது பொருளாகும். இதனை வி+நாயகர் = விநாயகர் -நாயகன் இல்லாதவர் என்று நோக்கி அறிய முடிகிறது. (வி+மலன் = விமலன் மலமில்லாதவன் எனப் பொருள்படுவது போல) ஆதி சங்கரர் தனது கணேச பஞ்சரத்தினத்தின் முதலாவது சுலோகத்தில் "அநாயகைக நாயகம்" என்று விநாயகரைக் குறிப்பிடுகின்றார். இந்த "அநாயகைக நாயகம்" என்பது அநாயக, ஏகநாயகம் என்ற இரு சொற்களால் ஆனது. இதன் பொருள் "தனக்கு ஒரு நாயகன் இல்லாத அநாயக நிலையிலும் எல்லா நாயர்கட்கும் நாயகராகிய நிலையிலும் உள்ளவர். என்பதாகும். மேலும் "வி" என்றால் கல்வி. நாயகர் என்றால் தலைவர். இதன்படி தன்னை வணங்குபவர்களுக்குக் கல்வியை தருபவர் என்பது பொருளாகும். இதனையே உமாபதி சிவாச்சாரியாரும் "நற்குஞ்சரக்கன்று நண்ணில் கலைஞானம் கற்கும் சரக்கன்று காண்" என்று திருவருட்பயன் ஆரம்பத்தில் குறிப்பிடுகின்றார். அடுத்து "வி" என்றால் திசை என்றும் நாயகர் என்றால் தலைவர் என்றும் பொருள் கொண்டு "எத்திசைக்கும் தானே தலைவர்" என்றும் விநாயகர் என்ற சொல்லுக்குப் பொருள் கூறலாம். விநாயகர் எனும் பெயரின் தத்துவப் பொருள் விநாயக புராணத்தில்

" விக்கின முழுது நீக்கி வேண்டிய வரங்கணல்கி
மக்கள் விண்ணவர்கள் யாவரும் வழிபடு தெய்வமாகி
யெக்கடவுளர்க்கு முன்னர்ப் பூசனையேற்பாராகி
மிக்கவரின்மை தோன்ற விநாயக ரெனும் பேர் தாங்கி"

என வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வக்கிரதுண்ட விநாயகர்

பிரளய முடிவில் தோன்றி பிரமன் விஷ்ணு உருத்திரன் என்ற மூவர்களைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத் தொழில்களைக் கற்பித்தமையால் "வக்கிர துண்ட விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

## சிந்தாமணி விநாயகர்

கபிலருடைய சிந்தாமணியைக் கவர்ந்து சென்ற கணராஜனை வென்று அதனை மீட்டு அவர்க்கு அளித்தமையால் "சிந்தாமணி விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.



### கஜானன விநாயகர்

பிரம்ம தேவனின் கொட்டாவியினின்றும் தோன்றிய சிந்தூரனைக் கொன்று தேவர்களைக் காத்தமையால் "கஜானன விநாயர்" என்னும் பெயர் பெற்றார்.

### விக்கினராஜ விநாயகர்

காலரூபனென்கின்ற விக்கினனை அழித்து உலகத்தைக் காத்தமையால் "விக்கின ராஜ விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.



### மயூரேச விநாயகர்

பிரமதேவனிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து சென்ற கமலாசுரனையும், தேவர்களைச் சிறை வைத்த சிந்தாசுரனையும் கொன்று ஏனைய அவுணர்கள் செய்த மாயையினை ஒழித்து மீட்டும் அவ்வேதங்களைப் பிரம தேவனுக்கீந்து தேவர்களை மீட்டு உலகுக்கு இதஞ்செய்தமையால் "மயூரேச விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

### பாலசந்திர விநாயகர்

யமனிடத்தினின்றும் உதித்த அனகரனை ஒரு சிறு பிராமணப் பிள்ளை போல் சென்று அவ்வசுரனை விழுங்கித் தேவர்களைக் காத்தமையால் "பால சந்திர விநாயகர்" என பெயர் பெற்றார்.

### கணபதி விநாயகர்

கஜமுகாசுரனைக் கொன்று விஷ்ணுவின் சாபம் தீர்த்தமையால் "கணபதி விநாயகர்" எனும் பெயர் பெற்றார்

### தூமகேது விநாயகர்

மாதவராசனுக்கும் அவர் மனைவியாகிய தமதைக்கும் தீங்கு செய்த தூபராசனைக் கொன்று அவ்விருவரையும் காப்பாற்றியமையால் "தூமகேது விநாயகர்" என்று பெயர் பெற்றார்.

### கணேச விநாயகர்

தன்னிடத்தில் அளவற்ற வரங்களைப் பெற்ற பெபி என்ற ஓரசுரன் மூவுலகங்களையும் அழிக்க முற்பட்ட போது தேவர்கள் விநாயகரை வேண்டுதல் செய்ய அவர் ஐந்து முகங்களோடு தோன்றி அவ்வசுரனை அழித்து தேவர்களைக் காப்பாற்றியதால் "கணேச விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

### மகோற்கட விநாயகர்

நராந்தகனையும், தேவாந்தகனையும் நாசம் செய்து காசிராஜனுக்கு முத்தி அளித்தமையால் "மகோற்கட விநாயகர்" என்றும் பெயர் பெற்றார்.

### துண்டிவிநாயகர்

துராசதனை வென்று திவோதரசன் மனத்தை மகிழ்வடையச் செய்து விஸ்வநாத மூர்த்திக்குக் காசிமாநகரை அழித்தமையால் "துண்டி விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

### கணபதி

விநாயகருக்குக் "கணபதி" என்பதே தொன்மையான பெயராக உள்ளது. கணபதி என்பதற்கு பிரமகணம், தேவகணம், பூதகணம், அசுரகணம், மனிதகணம் முதலிய எல்லாக் கணங்களுக்கும் தலைவர் என்பது பொருளாகும். "கணபதி" என்ற பெயரில் உள்ள "க" என்பது புத்தி. "ண" என்பது ஞானம். "பதி" என்பது தலைவர். இதனடிப்படையில் நோக்கும் போது "கணபதி" என்பதற்குப் புத்திக்கும் ஞானத்திற்கும் தலைவர் (அதிபதி) என்பது பொருளாகின்றது. இதனால் புத்தியையும் ஞானத்தையும் வளர்த்துக்கொள்ளுதலே உண்மையான கணபதி வழிபாட்டின் தத்துவப்பொருள் என்பது புலப்படுகின்றது.




### விக்கினேஸ்வரர்

விக்கினேஸ்வரர் என்பதற்கு விக்கினங்களை (இடையூறுகளை) ஆக்கவும், நீக்கவும் வல்லவர் என்பதே மெய்ப்பொருளாகும்.

### பிள்ளையார்

விநாயகரைப் பொதுவாக எல்லோரும் "பிள்ளையார்" என்றே அழைப்பர். சிவசக்திக்கு முதற்பிள்ளை என்பதால் முதலில் "பிள்ளை" என்னும் பெயர் பெற்றார். மரியாதைக்காக "பிள்ளை" என்பதுடன் யார்" என்ற விகுதி சேர்க்கப்பட்டு பிள்ளையார் என்று பின்னர் அவர் அழைக்கப்பட்டார். பிள்ளை என்றால் "குழந்தை" என்ற எண்ணமே முதலில் வருகின்றது. இதனைக் கருதியே அவரை "ஞானக்கொழுந்து" என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். பொதுவாக ஒரு கிராமத்திலோ அல்லது சிற்றூர்களிலோ இருக்கும் பெரிய குடும்பத்துப்பிள்ளை, எல்லோருக்கும் குழந்தையாகவே செல்வாக்கின் காரணத்தால் செல்லமாகக் கருதப்பட்டு அழைக்கப்படுவதைக் காண்கிறோம். இவ்வாறே அனைத்து உலகங்களுக்கும் தந்தையான சிவபெருமானின் முதற்பிள்ளை என்ற காரணத்தால் அவர்



பிள்ளையும் அனைவராலும்"பிள்ளை" என்றே அழைக்கப்பட்டு பின் னர் மரியாதைக்காக "யார்" என்ற அடைமொழி சேர்க் கப்பட்டு "பிள்ளையார்" என அழைக்கப்படுகின்றார். எனக் காஞ் சிப்பெரியவர் குறிப்பிடுவதும் இங்கு எண்ணி மகிழ்வதற்குரியது. பிள்ளைச் செல்வத்தை வழங்கும் தெய்வம் என்பதாலும் "பிள்ளையார்" எனும் பெயர் பெற்றார்.

## நவக்கிரக விநாயகர்

விநாயகரை வணங்கினால் நவக்கிரக வழிபாடும் நிறைவுறுமென்பது நவக்கிரக விநாயகர் சுட்டும் தத்துவமாகும். இதனைப் புலப்படுத்தும் விதத்தில் விநாயகரின் திருவுருவத்தில் ஒன்பது நவக்கிரகங்களும் அமைந்து விளங்கக் காணலாம். இத்தகைய வியத்தகு விநாயகர் வடிவத்தினையே " நவக்கிரக விநாயகர்" என அழைக்கின்றனர். இவ்வாறான நவக்கிரக விநாயகரின் திருவுருவத்தில் அவர் தனது நெற்றியில் சூரியனையும், நாபிக்கமலத்தில் (தொப்பூழ்) சந்திரனையும், வலது தொடையில் செவ்வாயினையும், இடது தொடையில் கேதுவையும் வலது மேற்கையில் சனியையும் , வலது கீழ்க் கையில் புதனையும், இடது மேற்கையில் இராகுவையும், இடது கீழ்க்கையில் வெள்ளியையும் தலையில் வியாழனையும் கொண்டவராகக் காட்சியளிக்கிறார். நவக்கிரக தோசம் உடையவர்கள் விநாயகரை வழிபடுவதன் மூலம் தோச நிவர்த்தி பெறுவர் என்பது நவக்கிரக விநாயகர் வழிபாட்டின் தத்துவநிலை ஆகும். தமிழகத்திலுள்ள சில விநாயகர் ஆலயங்களில் நவக்கிரக விநாயகர் வடிவத்தை ஓவிய வடிவத்தில் கண்டு வணங்க முடிகின்றது.



## விநாயகரின் வழிபாட்டுத் தத்துவம்


விநாயகரின் வழிபாட்டுத் தத்துவத்தில் விநாயகர் விரதங்கள் அறுகம்புல்லினால் அர்ச்சித்தல், தோப்புக்கரணம் போட்டு வழிபடல், சிதறு தேங்காய் உடைத்தல் என்பன தத்துவப் பொருள் உணர்த்துகின்றனவாக விளங்குகின்றன.

## விரதங்கள்

விநாயகர் வழிபாட்டிற்குரிய விரதங்களில் ஆவணிச் சதுர்த்தியும் மாசிச் சங்கடஹர சதுர்த்தியும் விசேடமானவை ஆகும். குற்றம் செய்கின்றவர்களை மன்னித்து அவரவர் விரும்பிய போக மோட்சங்களை விநாயகர் அளிக்கின்றார் என்பதே ஆவணி மாத விநாயகர் சதுர்த்தியின் உட்பொருளாகும்

## அறுகால் அர்ச்சித்தல்

விநாயகரை அறுகு மற்றும் வன்னிப்பத்திரங்கள், மந்தாரைப் பூ என்பவற்றால் அர்ச்சித்தல் வழக்கமாயினும் அறுகம்புல் அர்ச்சனை மிகு சிறப்புடையதாகும். எனக் கூறப்படுகின்றது. அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்ததால் இடபம், கழுதை, புலைச்சி என்போருக்குச் சாலோக முத்தி கிடைத்ததாக விநாயக புராணம் குறிப்பிடுகின்றது. எனவே



அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்தால் பெறுதற்கரிய முத்திப் பேரின்பம் கிடைக்குமென்பது அறுகம்புல்லின் தத்துவச் சிறப்பாகும். அறுகு ஓரிடத்தில் முளைத்துக் கொடிபோல் நீண்டு ஆறிடங்களில் வேரூன்றிப் படர்ந்து கொண்டே போகும் இயல்புடையது. அங்ஙனமே மூலாதார மூர்த்தியாக விளங்கும் விநாயகர் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம், ஆஞ்ஞை என்ற ஆறிடங்களிலும் பரந்து விளங்கி சகஸ்ரதளத்தில் விளங்கி அருளுகின்றார் என்பது அறுகம்புல் உணர்த்தும் தத்துவப் பொருளாகும். ஆறிடங்களில் படர்ந்து வேரூன்றும் இயல்பு அறுகுக்கு மட்டுமே இருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் இருப்புத்தன்மை உறுதியானது என்பதையே "அறுகுபோல் வேரூன்றி" என்ற பழமொழியும் சுட்டி நிற்கின்றது.

## தோப்புக்கரண வழிபாட்டு முறை

விநாயகரை வழிபடுகின்றவர்கள் முதலில் தோப்புக்கரணம் போட்டு அவரை வழிபடத் தொடங்குவர். வலக்கையால் இடக்காதின் கீழ்ப்பகுதியினையும், இடக்கையால் வலக்காதின் கீழ்ப்பகுதியினையும் பிடித்துக் கொண்டு நின்ற நிலையில் மூன்று முறை அல்லது பலமுறை உட்கார்ந்தும் எழுந்தும் வழிபடுவர். தோர்பி, கர்ணம் என்ற இரண்டு சொற்களும் இணைந்தே தோப்புக்கரணம் என மருவிவந்துள்ளது. தோர்பி என்றால் கைகளினால் என்றும், கர்ணம் என்றால் காது என்றும் பொருளாகும். எனவே தோர்பிரகரணம் எனின் கைகளினால் காதைப்பிடித்துக் கொள்வது என்பது கருத்தாகும். இதுவே மருவி தோப்புக்கரணம் என வழங்குகின்றது. தோப்புக்கரணம் போட்டு விநாயகரை வழிபடும் வழிபாட்டு முறையானது உடலின் நரம்பு மண்டல நல்லியக்கத்திற்கு வழிவகுக்கும் ஆன்மீக தத்துவ சாதனை முறையாக விளங்குகின்றது.



## சிதறு தேங்காய் உடைத்தல்

விநாயகரை வழிபடும் முறைகளுள் "சிதறு தேங்காய் உடைத்தல்" சிறப்பிடம் பெறுகின்றது. சிதறு தேங்காய் உடைத்தல் என்பது ஒன்று அல்லது பல தேங்காய்களை எடுத்து அது பல சிறுதுண்டுகளாகச் சிதறுமாறு விநாயகர் ஆலய முகப்பில் உள்ள ஒரு கல்லில் அல்லது அதற்குரிய இடத்தில் எறிந்து உடைத்தல் எனப் பொருள்படும். சிதறு தேங்காய் உடைத்தல் என்பதே இன்று எல்லோரும் செய்யும் விநாயகர் வழிபாடாக விளங்கக் காணலாம். உயர்வு தாழ்வு எதுவும் இன்றி எவரும் செய்கின்ற விநாயகர் வழிபாட்டு முறையாக இது நடைபெறுகின்றது. சிதறு தேங்காய் உடைக்கும் வழிபாட்டு முறை பற்றிய தத்துவ விளக்கம் பின்வருமாறு அமைகின்றது.

விநாயகர் ஒருமுறை தன் தந்தையாகிய சிவனிடம் சென்று அவரது தலையைத் தனக்குப் பலியாகத் தரவேண்டும் என்று கேட்டாரம் "மூன்று கண்கள் உடைய எனது தலையைத்

தானே வேண்டும்'' என்று சிவன் விநாயகரிடம் கேட்டபோது விநாயகர் அதற்கு "ஆம்'' என்று பதில் கூறினார். இதன் பிரகாரம் சிவனே மூன்று கண்களை உடைய தேங்காயை எறிந்து உடைத்தார். இந்த விளக்கத்தின் பிரகாரம் சிதறு தேங்காய் உடைத்தல் என்பது. ஒருவன் தனது கண்கள் உள்ள தலைப் பகுதியை இறைவனுக்குத் தியாகம் செய்யும் மாபெரும் வழிபாட்டுத் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது. இது பலி வழிபாட்டின் ஒரு வளர்ச்சி நிலையாகும். இன்று விநாயகர் ஆலயங்களில் சிதறு தேங்காய் உடைத்து வழிபடும் முறை காணப்படுகின்றபோதும் ஈழத்தில் உள்ள "திருமுறிகண்டி விநாயகர்'' கோயிலில் நாளாந்தம் ஆயிரக்கணக்கில் சிதறு தேங்காய் உடைத்து வழிபடும் மரபு சிறப்பாக நடைபெறுகின்றது. தமது பிரயாணம் தங்கு தடையின்றி நடைபெறவேண்டும் என்பதற்காக இவ்வாலய வீதியாற் செல்லும் பயணிகள் சிதறுதேங்காய் அடித்து முறிகண்டி விநாயகரை வழிபட்டு வருகின்றனர். சிதறு தேங்காய் உடைத்தல் என்பது மக்களின் உளநலத் தத்துவ வெளிப்பாடாகவே விநாயகர் ஆலயங்களில் சிறப்பாக நிகழ்த்தப்படுகின்றது.

### முடிவுரை

இவ்வாறாக விநாயகர் வியக்கத்தக்க விதத்திற் பற்பல திருவுருவங்களைக் கொண்டு திகழ்வதையும், அவரின் திருவுருவ உறுப்புக்களும் அவர் தனது திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்களும் , அவரின் திருநாமங்களும், அவர் எழுந்தருளும் வாகனங்களும் மற்றும் அவரின் வழிபாட்டு முறைகளும் விநாயகர் தத்துவத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்பதையும் அறிய முடிகின்றது.



### மோதகத்தின் தத்துவம்

மோதகத்தின் வெளியில் அமைந்துள்ள மா ஆனது அதனுள்ளே பூரணமும் உண்டு. பூரணம் இல்லாமல் அதனுள்ளே மாப்பண்டம் சுவைப்பதில்லை. அதே போலத் தான் பூரணப் பிரமத்தை அறியாத மனித வாழ்வில் சுகமில்லை, அர்த்தம் இல்லை, இந்தத் தத்துவத்தின் சின்னமாகத்தான் மோதகம் விளங்குகின்றது.

" எம்பெருமானே வெளியிலே நான் காட்சியளித்தாலும் என்னுள்ளே பூரணமாக இருந்து என்னைப் புனிதப்படுத்துவது நீயன்றோ! என்னையே நான் ஆத்ம நிவேதனம் செய்கின்றேன். என்பதுவே மோதகத்தின் தத்துவ விளக்கமாகும்.

### துணை நூல்கள்


1. ஜெயா பி. விநாயகர் வழிபாடு -நாகர் கோயில்
2. வடிவேலன் சு. கணபதி வரலாறு "திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
3. நடராஜன் எஸ். " கணபதி ஜ்ருநயம்
4. தண்டபாணி தேசிகர் ச. "கணபதி"
   திருவாவடுதுறை ஆதினம் - 1992
5. சுவாமி சித்பவானந்தர் - "கடவுள் வடிவங்கள்"



Harikanan, Jaffna.